MASTER NEGATIVE
NUMBER

6070.11

தாருல் இஸ்லாம்

மலர் 6, இதழ் 12

December 01, 1924

Record no. 213

Tārul Islām

Malar 6, itaḻ 12

December 01, 1924

Record no. 213





தாருல் இஸ்லாம்



பா. தாவுத்ஷா

Photo By G. V. Naidu, Negapatam.

بسم الله الرحمن الرحيم
نحمده و نصلي

தாருல் இஸ்லாம்
DAR-UL-ISLAM

பத்திராசிரியர்:—பா. தாவுத்ஷா

மலர் - 6. | 1924ஞ டிஸம்பர்மீ 1உ | இதழ்-12.

:குர் ஆன்

அத்தியாயம் 78.

பிரயோஜன சமாசாரம் (அந் நபா')

மக்காவில் வெளியானது; பிரிவு 2, வாக்கியம் 40.

பிரிவு—1.

இறுதித் தீர்ப்புநாள்.

அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லா(ஹ்)வின் திருநாமத்தால்.

1. எதைப்பற்றி ஒருவருக்கொருவர் கேட்டுக்கொள்கிறார்கள்?
2. (ஒரு) மகா பெரிய விஷயத்தைப்பற்றி,
3. எதைப்பற்றி அவர்கள் விகற்பம் செய்துகொண் டிருக்கிறார்களோ (அதைப்பற்றி),
4. அவ்வாறில்லை! அவர்கள் அறிந்துகொள்வார்கள்;
5. பிறகும் அவ்வாறில்லை! அவர்கள் அறிந்துகொள்வார்கள்.
6. நாம் பூமியை விரிப்பாக ஆக்கவில்லையா?
7. மேலும் மலைகளை முளைகளாக.
8. மேலும் நாம் உங்களை ஜோடி ஜோடியாகப் படைத்தோம்,
9. மேலும் நாம் உங்களுடைய நித்திரையை(ச்சரீர) ஆரோக்கியமாக ஆக்கினோம்,
10. மேலும் நாம் இரவைத் திரையாக்கினோம்,

11. மேலும் நாம் பகலை ஜீவனோபாயத்துக்காக ஆக்கினோம்,
12. மேலும் நாம் உங்களுக்கு மேலே உறுதியான ஏழு (வானங்களை) உண்டாக்கினோம்,
13. மேலும் நாம் (சூரிய) தீபத்தைப் பிரகாசிக்கும்படியானதாக ஆக்கினோம்,
14. மேலும் நாம் மேகத்திலிருந்து வேகமாய்ப் பொழியும் (மழை) நீரை இறக்கிவைத்தோம்,
15. நாம் அதனால் தான்யத்தையும் புற்பூண்டுகளையும் வெளிப்படுத்துவதற்காக,
16. மேலும் அடர்த்தியான (செழித்த) பூம்பொழில்களையும்.
17. நிச்சயமாகத் தீர்ப்புநாளானது குறிக்கப்பட்ட வேளையாய் விட்டது:
18. கொம்பினால் ஊதப்படும்நாளில் நீங்கள் பல கூட்டங்களாக வருவீர்கள்,
19. மேலும் வானம் திறக்கப்படும், அப்போது அது வாயில்களாய் விடும்,
20. மேலும் மலைகள் (தம்மிடத்தைவிட்டு) அகற்றப்படும், அப்போது அவைகள் கானல் (போல்) ஆய்விடும்.
21. நிச்சயமாக நரகம் எதிர்பார்ப்பதாக ஆய்விட்டது,
22. வரம்பை மீறியவர்கட்குத் தங்குமிடமாக,
23. அதில் அனேக ஆண்டுகள் தங்கினவர்களா யிருப்பார்கள்.
24. அதில் அவர்கள் குளிர்ச்சியை (சுகத்தை) யும் பானங்களையும் அனுபவிக்கமாட்டார்கள்,
25. கொதிக்கின்ற நீரையும் மிகக் குளிர்ச்சியான (நீரை)யுந் தவிர்த்து,
26. (செய்கைகளுக்குத்) தகுந்த பிரதிபலனாக,
27. (ஏனெனின்) நிச்சயமாக அவர்கள் கேள்விகணக்கில் நம்பிக்கை வையாதவர்களா யிருந்தார்கள்,
28. மேலும் நம்முடைய அறிவிப்புக்களைப் பொய்யென்று (கூறிப்) பொய்யாக்கினார்கள்.
29. மேலும் எல்லாவற்றையும் நாம் புத்தகத்தில் பத்திரப்படுத்திக் கொண்டோம்.
30. ஆதலின் அனுபவியுங்கள்! நாம் உங்களுக்கு வேதனையைத்தவிர (வேறொன்றையும்) அதிகமாக்கமாட்டோம்.

பிரிவு—2.

இறுதித் தீர்ப்புநாள்.

31. நிச்சயமாக அச்சப்பாடுள்ளவர்களுக்கே ஜயம் (உண்டு),
32. தோப்புக்களும் திராக்ஷைகளும்,
33. மேலும் ஒரேவயதுள்ள யௌவனமுடையவர்களும்,
34. மேலும் தூய்மையான பாத்திரமும்,

35. அதில் அவர்கள் வீண்வார்த்தைகளைக் கேட்கமாட்டார்கள், மேலும் (ஒருவரை யொருவர்) பொய்யாக்கவு மாட்டார்கள்.
36. உம்முடைய ரப்'பி'னிடமிருந்து பிரதிபலனைப் போதுமான நன்கொடை:
37. வானங்களின் இன்னும் பூமியின் இன்னும் இவ்விரண்டுக்கும் இடையிலுள்ள ஏனை வஸ்துக்களின் ரப்,' அருளாளன்; அவர்கள் அவனிடம் பேசச் சுதந்தரமுள்ளவர்க ளாகமாட்டார்கள்.
38. ஆத்மாவும் தேவதூதர்களும் அணிவகுத்து நிற்கும்நாளில் அருளாளன் யாருக்கு உத்தரவுகொடுத்து எவன் நேரான வார்த்தையும் சொன்னானோ அவனைத்தவிர (வேறு யாரும்) பேசமாட்டார்கள்,
39. இந்த நாள் உண்மையானதாயிருக்கும்; ஆதலின் நாடுகிறவன் தன்னுடைய ரப்'பி'ன் பக்கம் புகலிடத்தை ஆக்கிக்கொள்வான்.
40. நிச்சயமாக நாம் உங்களுக்கு நெருங்கிய வேதனையைப் (பற்றிப்) பயமுறுத்துகிறோம்: மனிதன் தன்னிருகரங்களும் முன்னே அனுப்பியவற்றைப் பார்க்கும் நாள்; மேலும் நன்னம்பிக்கையற்றவன், நான் மண்ணாய்ப் போகவேண்டி யிருந்ததே என்று சொல்லுவான்.

நாயக வாக்கியம்

436. மதவிஷயத்தில் இரத்தசாக்ஷி மரணத்தினால் மரிப்பவனது உதிரத்தைக் காட்டினும் கற்றறிந்தோனின் (எழுதுகோலின்) மையானது அதிக பரிசுத்தமுள்ளதா யிருக்கிறது.

437. ஞானம்பெறும்பொருட்டுத் தன் வீட்டைவிட்டு வெளிப்படுவோன் அல்லா(ஹ்)வின் பாதையில் யாத்திரைசெய்கிறான்.

438. சிருஷ்டி கர்த்தாவின் சிருஷ்டியின் பெருமையைப்பற்றி ஒருமணிநேரம் தியானிப்பதானது எழுபது ஆண்டுகள் மட்டும் வணக்கம் புரிவதைக்காட்டினும் சிறப்புற்றதா யிருக்கிறது.

439. சன்மார்க்கத்தைப் போதிக்கும் ஒவ்வொருவரும் தத்தம் முடைய சொந்த குணாதிசயத்தைப் பரிசோதித்துப் பார்ப்பாராக.

440. ஆண்டவன் பரிசுத்தமானவன்; அவன் தூய்மையையும் பரிசுத்தத்தையுமே விரும்புகிறான்.

441. ஆண்டவன் தன்னுடைய சிம்மாசனத்தின்கீழ்ப் புதையல்களை வைத்திருக்கிறான்; இவற்றிற்குரிய திறவுகோல்கள் வித்வான்களின் நாக்களாயிருக்கின்றன.

442. அறிவை அடையவேண்டுவது ஆணாயினும் பெண்ணாயினும் ஒவ்வொரு முஸ்லிமின்மீதும் கடமையாயிருக்கிறது.

443. அறிவைத் தேடிக்கொள்க. அறிவுள்ளவனை அவ்வறிவானது நன்மை தீமை இன்னதென உணர்ந்துகொள்ளும்படி செய்கிறது; அது சுவர்க்கம் புகுதற்குவேண்டிய வழியைத் துலக்குகின்றது; தனித்த பாலைவனத்தில் அவ்வறிவு நமக்கு நண்பனாயும், ஏகாங்கியாயிருக்கும்போது நமக்குத் துணைவனாயும், நேயர்களில்லாதபோது நமக்குக் கூட்டாளியாயு மிருக்கின்றது. பேரானந்த மடைவதற்குப் பேருதவி புரிகின்றது; துன்பம் நேருங்கால் நம் துயரத்தை மாற்றுகிறது; நண்பர்களுக்குள் ஓர் ஆபரணமாயும் எதிரிகளின் முன்னே ஒரு கவசமாயும் அவ்வறிவு அமைந்திருக்கிறது.

(உம்மீயாயிருந்த எழுதப் படிக்கத் தெரியாத ஒரு நபியால் அந்த அரப் தேசப் பாலைவனத்தில் உபதேசிக்கப்பட்ட இவ்வுண்மையை இற்றைநாள் முஸ்லிம்கள் நன்கு நிதானித்துப் பார்ப்பார்களாக.)

444. அறிவைக்கொண்டு மனிதன் நன்மையின் உச்சஸ்தானத்தையும் அந்தஸ்தின் உயர் பதவியையும் அடைகிறான்; இவ்வுலகில் அரசர்களுடன் அன்னியோன்னியமாகிறான்; மறுவுலகில் பேரின்பத்தின் பரிபூர்ணத்தை யடைகிறான்.

445. ஏ ஆண்டவனே! எனக்கு உன்மாட்டு விருப்பமுண்டாகும்படி செய்; உன்னை நேசிப்பவரை நான் நேசிக்கும்படி செய்; உன்னுடைய நேசத்தைப் பெறும்படியான செய்கைகளையே நான் செய்யும்படி செய்; என்னுடைய உயிரைக் காட்டினும் குடும்பத்தைக் காட்டினும் ஐசுவரியத்தைக் காட்டினும் உன்மீது என் விசுவாசத்தைத் தழைத்தோங்கும்படி செய்.

446. ஏ என்னுடைய நாயனே! என்னுடைய பலஹீனத்தின் காரணத்தினாலும் என்னுடைய எண்ணங்களின் பயனின்மையின் காரணத்தினாலும் என்னுடைய குறையை உன்பால் தெரிவித்துக் கொள்கிறேன். ஏ காருண்ய மூர்த்தியே! மனிதர்களுடைய பார்வையில் நான் ஓர் அற்பனாய்க் காணப்படுகிறேன். ஏழைகளுக்கு இறைவனே! என்னுடைய தலைவனே! என்னைக் கைவிட்டு விடாதே. அன்னியர்களுக்கேனும் என்னுடைய எதிரிகளுக்கேனும் என்னை ஓர் இரையாகக் கொடுத்துவிடாதே. உனக்கு மனவருத்தம் உண்டாகாமலிருக்கும் பக்ஷத்தில் நான் பத்திரமா யிருப்பேன். எல்லா அஞ்ஞானமும் ஒழிவதற்கும் இகத்திலும் பரத்திலும் ஆத்ம சாந்தி ஜனிப்பதற்கும் காரணபூதமா யிருக்கின்ற உன்னுடைய கிருபா கடாக்ஷ ஒளியிலேயே நான் புகலிடந் தேடுகிறேன். உன்னுடைய நாட்டம்போல் என்னுடைய கஷ்டங்களுக்குப் பரிஹாரம் செய்வா

யாக. உன்னையன்றி வேறு யாதொருவிதமான அதிகாரமும் ஆண்மையுமில்லை.

(இந்தப் பிரார்த்தனையானது நபிகள் நாயகமவர்களால் தங்களுடைய ஓர் ஆழமான மனத்துயரத்தின் வேளையில் செய்யப்பட்டது. ‘தாயி‘ப் என்னுமிடத்திற்கு நபிகள்பிரான் உபதேசஞ் செய்யச்சென்றபோது அங்கிருந்த விக்கிரக வணக்கக்காரர்கள் தங்களுரைவிட்டு ரஸூல் நாயகத்தைத் துரத்திவிட்டார்கள். கீழ்த்தர மக்களும் அடிமைகளும் அன்னாரைக் கல்லா லடித்துக்கொண்டும் கைகொட்டிக் கேலிசெய்துகொண்டும் அதிகநேரம் வரையில் பின்தொடர்ந்து வந்தார்கள். கல்லெறியால் காயமுண்டும் பாதமிரண்டும் உதிரம் சொரியவும் நெடுந்தூரம் நடந்துசென்று அங்கோரிடத்தில் தனித்திருந்து மேற்கூறியவாறு உள்ளங்கனிந்து உருகினார்கள். ப.ர்)

447. நோன்பு வையுங்கள்; ஆனால் ஆகாரமும் புசியுங்கள்; இரவில் விழித்திருங்கள்; ஆனால் தூங்கவும் செல்லுங்கள். நீங்கள் நோய்வாய்ப் படாமலும் உங்களையே நாசமாக்கிக் கொள்ளாமலும் இருக்கும்பொருட்டு அளவுகடந்த வேலையைச் செய்யாது உங்களுடைய உடம்பின்மீது நீங்கள் செலுத்தக்கூடிய ஒருவகைக் கடமையும் இருக்கிறது. உங்கள் கண்களின்மீதும் நீங்கள் காட்டவேண்டிய கடமை யொன்றுண்டு: நீங்கள் சில சமயங்களில் தூங்கி அவற்றிற்கு ஓய்வு கொடுக்கவேண்டும்; மேலும் உங்களைப் பார்க்கவருகின்ற மனைவிமுதலிய மற்றை விருந்தினருக்கும் வேறு உங்களைப் பார்க்கவரும் நண்பர்களுக்கும் நீங்கள் செய்யவேண்டிய கடமை யொன்றுண்டு: நீங்கள் அவர்களுடன் இனிய வசனம் பேசுதல் வேண்டும். ஒருவரும் இவ்வுலகில் எக்காலத்திலும் விடாமல் நோன்பிருந்ததில்லை; ஒவ்வொரு மாதத்திலும் மும்மூன்று நாள் நோன்பு வைப்பதானது காலமுழுதும் நோன்பிருத்தற்கு ஒப்பாகும்: எனவே ஒவ்வொரு மாதத்திலும் மும்மூன்றுதினம் நோன்பிருங்கள்.

448. “ஏ அல்லா(ஹ்)வின் தூதரே! கா‘பிர்களைச் சபிப்பீர்களாக,” என்று ரஸூல் நாயகமவர்களிடம் சிலர் கூறியபோது, மு‘ஹம்மத் முஸ்‘த‘பா (ஸல்அ’ம்) அவர்கள், “இதற்காக நான் அனுப்பப்படவில்லை; இன்னமும் மனிதகோடிகளுக்கு ஒரு தயாளமாகவே யல்லாமலும் நான் அனுப்பப்படவில்லை,” என்று மறுமொழி கூறினார்கள்.

449. “அதன்பின் என்னுடைய அடியார்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு நான் ஒருசட்டசம்பந்தமானவேதத்தைக் கொடுத்தேன்; பின்னர் அவர்களுள் சிலர் தங்களுடைய ஆத்மாக்

களையே பாதகப்படுத்திக் கொள்ளுகிருர்கள். வேறுசிலர் தங்களு டைய செய்கைகளில் நடு நிலையான வழியைப் பின்பற்றுகிருர்கள். மற்றுஞ் சிலர் நன்மை செய்வதில் விரைவுள்ளவர்களா யிருக்கிருர் கள்,'' என்னும் வேதவாக்கியத்துக்கு வியாக்கியானம் செய்யும் போது நபிகள் பெருமானுர், "அவர்களெல்லோரும் சுவர்க்கத்தி லிருக்கிருர்கள்; தத்தம்முடைய மேன்மைக்கும் அந்தஸ்துக்கும் தக்க வாருக அங்கே அமைந்திருக்கிருர்கள்,'' என்று கூறினுர்கள், என்று உஸாமா பி'ன் 'ஜய்த்' என்பவர் கூறியிருக்கிருர்.

450. சுவர்க்கமென்பது என்ன? என்று கேட்டபோது நபிகள் (ஸ'ல்அ'ம்) அவர்கள் விடை பகர்ந்தார்கள்: "அதுதான் மனித னுடைய கண் கண்டிராதது; அவனுடைய காதும் கேட்டிராதது; அல்லது மனிதனுடைய மனத்தினூடே அஃது எப்படியிருக்கு மென்னும் எண்ணமும் ஒருபோதும் நுழைந்திராதது."

[ரஸூலுல்லா(ஹ்)வின் சுவர்க்கலக்ஷணம் இவ்வாறு இருக்கும் போதுதான் நரகமும் சுவர்க்கமும் இன்ன இன்ன விதமாக ஜட பதார்த்தங்களால் அமைக்கப்பட்டிருக்கின்றன வென்று ஒரு சிலர் வாதிக்கின்றனர். அவர்களுடைய வாதத்தையெல்லாம் இந்தத் திருவாக்கியத்துடன் எவ்வாறு பொருத்திக் காட்டுதல்முடியும்? ப-ர்.]

451. "ஒவ்வொரு நூற்ருண்டின் ஆரம்பத்திலும் இந்த ஜனங் களுக்கு இவர்களுடைய மதத்தைச் சீர்திருத்தம் செய்யக்கூடிய ஒவ்வொருவரை ஆண்டவன் நிச்சயமாக அனுப்புவான்."

(ஹிஜ்ரி 14-வது நூற்ருண்டு ஆரம்பமாகிச் சற்றேறக் குறைய அரை நூற்ருண்டாகியும் இதுகாறும் இந் நூற்ருண்டுக்கு வேண் டிய மத சீர்திருத்தக்காரர் எங்கே அவதரித்திருக்கிருரென்று இந்த நாயக வாக்கியத்தை உண்மையென்று ஒத்துக்கொள்வோரை யாம் மிகப்பணிவுடன் வினவுகிறோம். ப-ர்).

(மிஷ்காத் முற்றுப்பெற்றது)



இன்னும் சந்தேகமேன்?

ليس عليك هداهم ولكن الله يهدي من يشاء

"அவர்களுக்கு நேர்வழியைக் காட்டவேண்டுவது உம்மு டைய பொறுப்பன்று; ஆனுல் அல்லா(ஹ்) தான் நாடியவருக்கு நேர்வழியைக் காட்டுகிருன்" (:குர். 2: 272).

அல்லாஹு த ஆ'லாவானவன் இவ்வாறு தன்னுடைய ரஸூல் நாயகத்தை நோக்கிக் கூறியிருக்கிருன். ஆயினும் அவனுடைய கட்டளையின்படியே நபிகள் நாயகமவர்கள் இஸ்லாத்தின் பெரு மையை எல்லோருக்கும் எடுத்தோதி வந்திருக்கிருர்கள். ஆண்டவ னிடத்திலிருந்து தாங்கள் கற்றுக்கொண்ட ஞானத்தையும் வேதத் தையும் நபிபெருமான் மற்றையோருக்கு எடுத்தோதிய வண்ணமே, அன்னுரிடத்திலிருந்து தெரிந்து கொண்ட உண்மையை ஏனையோ ருக்கும் எடுத்துக்காட்டவேண்டுவது எல்லா முஸ்லிம்களின்மீதும் கடமையாயிருக்கின்றது (:குர். 2: 143). ஒருவர் நல்வழியில் வரு வதும் வராமற்போவதும் ஆண்டவனுடைய நாட்டமாயிருந்த போதிலும் நாம் ஒவ்வொருவரும் நமக்குத் தெரிந்த உண்மையை மற்றெல்லோருக்கும் எடுத்துக்கூறக் கடமைப்பட்டுள்ளோம்; ஆண்டவனுடைய இவ்வாணையின் பிரகாரம் யாமும் எத்தனையோ விதமான அரிய தியாகங்களினூடே எம்மா லியன்றமட்டில் இஸ் லாத்தின் பெருமையை எல்லோருக்கும் எடுத்து விளக்கிக்காட்டி வருகிறோம். இப்படிப்பட்ட பிரசாரமானது எம்மால் சென்ற ஆறு வருடங்களாக இடைவிடாமல் பல இடுக்கண்களி னிடையிடையே மிக ஒழுங்காக நடத்தப்பட்டு வருகிறதென்பது உங்களெல்லோருக் கும் செவ்வனே தெரியக்கிடக்கின்றது; இதனுல் எத்தனை முஸ்லிம் களும் அல்லாதாரும் பயனடைந்து வருகிருர்களென்பதும் உங்களுக்குத் தெரியாமலில்லை. இதுகாறும் இப்பத்திரிகையானது நிரந்தரமாக நடைபெற்று வருவதிலிருந்தே உங்களுக்கு இத்தகைய பிரசாரத்தில் எத்துணைப் பிரியமுண்டென்பதை யாங்கள் செவ் வனே உணர்ந்துகொண் டிருக்கிறோம். எனவே இப் பத்திரிகை யானது உங்களுடையதே என்பது ஒருபோதும் மிகையாகாது; நீங்

கள். ஒவ்வொருவரும் இதைக் குறித்துச் சொந்தம் பாராட்டும் போது இறைவனருளால் எமக்கென்ன இதில் மனச்சோர்வு உண்டாகப்போகிறது?

ஆயினும் எம்முடைய பிரசாரத்தைக்குறித்துச் சிற்சிலர் ஏதேதோ எழுதியும் சொல்லியும் வருகிறார்களென்பது எம்முடைய நண்பர்கள் சிலரால் அறிந்துகொண்டிருக்கிறோம். அன்னாரின் அறியாமைக்காக ஆண்டவன்பால் மன்னிப்புக் கேட்பதல்லாமல் மற்றையதொன்றும் யாம் செய்ய விருப்பங்கொண்டிலேம்; எம்முடைய கொள்கையானது பலாத்காரமற்ற ஒத்துழையாமையாகவே யிருத்தலினால் ஒருவருடனும் யாம் பலாத்காரமான வழியில் கூட்டுறவு செய்துகொள்ளத் துணியோம். அவர்கள் எங்களைப்பற்றிக் கூறும் அவதூறுகளுக்கும் அநாகரிகமுள்ள வசைமொழிகளுக்கும் ஆண்டவ னொருவனே சாக்ஷியாயிருக்கிறான். ஆண்டவன் ஒருவனேயென்றும் மு‘ஹம்மத்’ நபி (ஸல் அ’ம்) அவர்கள் அவனுடைய மெய்யான தூதரென்றும் இவர்களே அவனுடைய இறுதிநபியென்றும் உறுதிகொண்டிருக்கிறோம். ஆதலின் அல்லா(ஹ்)வும் அவனுடைய ரஸூலும் கூறியிருப்பதற்கு முற்றிலும் தலைசாய்க்கிறோம். எனவே :குர்ஆன் ஷரீ‘பாலும், ‘ஹதீ’:த் ஷரீ‘பாலும் நிலைநிறுத்தப்படுகின்ற எல்லா விஷயங்களையும் மனமார ஏற்றுக்கொள்ளுகிறோம்; அல்லா(ஹ்)வும் ரஸூலும் கூறியவாறே கூறியிருக்கும் எல்லா இமாம்களின் எழுத்துக்களுக்கும் ஏனைப் பெரியார்களின் வார்த்தைகளுக்கும் முற்றிலும் கட்டுப்பட்டுள்ளோம். இறுதி நபியாகிய மு‘ஹம்மத்’ முஸ்’:த‘பா (ஸல் அ’ம்) அவர்களுக்குப் பின்னர் வேறொரு நபியும் வரமாட்டாரென்றும் விளக்கமாகச் சொல்லுகிறோம். ஆதலின் இந்த இறுதிநபிக்குப் பின்னே இவ்வுலகில் தோன்றியிருக்கும் எந்த மனிதனையும் யாங்கள் நபியென்றோ, மஸீ‘ஹ் என்றோ, மஹ்தீ’ என்றோ நம்பவுமில்லை; அவ்வாறு ஒப்புக்கொள்ளவுமில்லை. எனவே இத்தரணியிலுள்ள எந்த அ‘ஹ்மதி’யா இயக்கத்துக்கும், எந்த கா’தி’யானிக் கூட்டத்துக்கும், இந்த “தாருல் இஸ்லாம்” பத்திரிகைக்கும் இற்றைநாளில் யாதொரு விதமான சம்பந்தமுமில்லையென்று அதிபகிரங்கமாகக் கூறத்துணிகின்றோம். எங்களுடைய மார்க்கக் கொள்கையின் சார்பான உறுதிமொழியானது இஃதேயாகும்.

ஆனால் மனித புத்தியானது தேவ ஞானத்தை யடையாதமட்டில் பரிபூர்ணக் குறைவுற்றதாகவே இருந்துவருகிறதென்பது திண்ணம்; மனித புத்தியானது சுயமே எவ்வளவு உன்னதமான தீக்ஷண்யத்தை யடைந்திருந்தபோதிலும் அதற்குமேல் மறைவாக வைக்கப்பட்டிருக்கும் விஷயங்களை ஒருவராலும் இவ்வுலகில் உணர்ந்துகொள்ளுதல் முடியாது. என்வே அப்படிப்பட்ட அந்தரங்க விஷயமனைத்தையும் அறிந்துகொள்ளவேண்டுமாயின் அதற்குத் தேவ ஞானமென்னும் வ‘ஹீயே அவசியமாகக் காணப்படுகின்றது; ஆதலின் மனித புத்தியை மழுங்கச் செய்வதற்காக ஆண்டவனால் வ‘ஹீ யென்பது அனுப்பப்படுவதில்லை; ஆனால் மனித புத்தியை அதி தீக்ஷண்யத்துக்குமேல் மகா தீக்ஷண்யமாகச் செய்யும்பொருட்டே மனித கோடிகளின் நன்மைக்காக ஆண்டவனால் தன்னுடைய திருத்தூதர்களின் மூலம் வ‘ஹீயானது அடிக்கடி இவ்வுலகத்துக்கு அனுப்பப்பட்டுவந்திருக்கிறது. இப்படிப்பட்ட கொள்கைக்கு ஒத்தவாறாகத்தான் எம்முடைய இஸ்லாமிய பிரசாரமும் ஏனைப் பிரசுரங்களும் வெளியாக்கப்பட்டு வருகின்றன.

எனவே எம்மால் அங்கீகரிக்கப்பட்டும் அனுஷ்டிக்கப்பட்டும் வருகின்ற முக்கியமான அம்சங்களுள் முதன்மையானவை பின்வருவனவா யிருக்கின்றன:—

(1) உண்மை முஸ்லிமாயிருக்க விரும்புகிறவர் தம்முடைய மரண பரியந்தம் எப்படிப்பட்ட ஷிர்க்கான (ஏக தெய்வத்துக்கு இணைவைக்கும்) குற்றத்தையும் செய்யாதிருப்பாராக.

(2) கொலை, களவு, கள், காமம், பொய், வஞ்சனை, சூது, தீய சிந்தனை, கொடிய பார்வை, அல்லா(ஹ்)வின் ஏவலை மீறி நடத்தல், சதியாலோசனை செய்தல் முதலிய தீமைகளினின்றும் விலகிக்கொள்வாராக; சுருங்கச் சொல்லுமிடத்து, தம் மனம் போனபடியெல்லாம் போகாதிருப்பாராக.

(3) தினம் ஐந்துவேளையும் தவறாமல் தொழுதுகொள்வாராக. நபிகள் நாயகத்தின்மீது வாழ்த்துதல் கூறி அல்லாஹு த’ஆலாவினிடம் அனவரதமும் தம்முடைய பாபங்களுக்காக மன்னிப்புத் தேடி அவனுடைய பாதுகாப்பை என்றென்றும் நாடுவாராக. ஆண்டவனுடைய எண்ணிறந்த நற்செல்வக் கொடைகளைக் குறித்து எப்படிப்பட்ட நேரத்திலும் அவனையே ஸ்தோத்திரம் செய்து மேன்மைப்படுத்துவாராக.

(4) பொதுவாக மனிதவர்க்கத்தாருக்கும், சிறப்பாக முஸ்லிம் வர்க்கத்தாருக்கும் தம்முடைய மனோ வாக்குக் காயங்களால் துன்பம் இழைக்காமலிருப்பாராக.

(5) சுக துக்கவேளைகளிலும் லாபநஷ்ட காலங்களிலும் அல்லா(ஹ்)வினிடத்தில் அவர் வைத்த உறுதிப்பாட்டை மாற்றாதிருப்பாராக. ஆண்டவனுடைய பாதையில் உழைப்பதில் எப்பொழுதும் எப்படிப்பட்ட துன்பம்நேரிட்டாலும் எத்துணை அவமானம் விளைந்தாலும் தொழுகையைக்கொண்டும் பொறுமையைக்கொண்டும்

ஆண்டவனுடைய உதவியை எதிர்பார்ப்பாராக. எத்துணைக் கடுமையான சோதனை நேர்ந்தபோதிலும் ஆண்டவனிடத்திலிருந்து தம் முகத்தைத் திருப்பிக்கொள்ளாமல் அவனிடத்தில் மு'ஹப்ப'த்தை (பிரியத்தை) அதிகப்படுத்துவாராக.

(6) பஞ்சேந்திரியங்களின் ஆசைவழியே சென்றுவிடாமல் :குர்ஆனுக்கு முற்றிலும் தலைசாய்த்துத் தம்முடைய வாழ்நாளுக்குவேண்டிய வழிகாட்டியாக நபிகள் நாயகத்தின் வார்த்தைகளையும் நடத்தைகளையும் ஏற்றுக்கொள்வாராக.

(7) தம்முடைய அகங்கார மமகாரங்களை அடியோடு அறுத்துவிட்டுச் சாந்தமாகவும் பணிவுடனும் நடந்துகொள்வாராக.

(8) தம்முடைய ஐசுவரியம், அதிகாரம், பெண்டுகள், பிள்ளைகள், உற்றார், உறவினர் முதலிய எல்லாவிதமான உலக சம்பந்தமுள்ள பந்தங்களைக்காட்டினும் இஸ்லாத்தின் மேன்மையையும் பெருமையையுமே அதிக சிலாக்கியமெனப் பாராட்டுவாராக.

(9) அல்லா(ஹ்)வுடைய எல்லாப்பிராணிகளிடத்திலும் கருணைகாட்டித் தம்மாலியன்றமட்டும் மனித வர்க்கத்துக்கு நன்மையே புரிந்துவருவாராக.

இக் கொள்கைகளுக்கு விரோதமாக இதுகாறும் யாம் நடந்ததில்லை; இப்பொழுதும் நடக்கிறோமில்லை; இனியும் நடப்போமில்லை. இப்படிப்பட்ட முறைமையில்தான் இத் தென்னாட்டு முஸ்லிம்களைப் பழக்கவேண்டுமென்பது எம்முடைய அபிலாஷையாயிருக்கிறது; இதற்கான வழியில் இஸ்லாத்தின் படிப்பினை என்ன விதமாயிருக்கிறதென்று இதர மதச் சகோதரர்களுக்கு எண்பிக்கவேண்டுமென்பதும் எம்முடைய ஆர்வத்தின் ஓர் அம்சமேயாகும். சகோதர சகோதரிகாள்! இப்படிப்பட்ட வழியில் உழைத்துவரும் இப்பத்திரிகையைத் தாங்களெல்லீரும் நன்கு ஆதரித்து வருவதற்கு யாம் பெரிதும் வந்தனம் கூறாமலிருப்பதற்கு முடியவில்லை. இதுவரையில் இருந்ததுபோலில்லாமல் இன்னும் சில திருத்தங்களுடனும் மானஸநூல், அறிவுநூல், சரித்திரநூல் முதலிய பெருக்கங்களுடனும் புதியவண்ணமாக அடுத்த ஜனவரிமுதல் இப்பத்திரிகையை (ஆண்டவன் நாடினால்) வெளியிட உத்தேசித்திருக்கிறோம். இப்பொழுதிருப்பதேபோல் அப்பொழுதும் மாணவர்களுக்கு ரூ. 2 சந்தா வைப்பதுடன், மற்றும் பல சங்கங்கள், வாசக சாலைகள் முதலிய பொது ஸ்தாபனங்களுக்கும் இன்னும் ஏனைய ஹிந்து நண்பர்களுக்கும் அதே ரூபாய் இரண்டையே சந்தாவாக நியமிக்கவும் உத்தேசித்திருக்கிறோம். இப்படிப்பட்ட திருத்தங்களுக்கும் முற்போக்கான நோக்கங்களுக்கும் இப்பொழுதைக் காட்டினும் அதிகமான திரவிய சகாயம் வேண்டப்படுமென்பது உங்களெல்லீருக்கும் விளங்கக் கிடக்கும் விஷயமன்றோ?

இத்திரவிய சம்பந்தமாகக் கூறும்போது யாம் இன்னொன்றும் கூறாமலிருக்கக் கூடவில்லை. எம்முடைய சர்க்கார் உத்தியோகத்தைப் பொதுஜன சேவையின் பொருட்டுத் திரஸ்கரித்துவிட்ட பின்னர் வேறு பிழைப்புக்கு மார்க்கமின்றி இப் பத்திரிகைத் தொழிலை ஒரு வியாஜமாக வைத்துக்கொண்டு யாம் பொதுமக்களை ஏமாற்றிப் பணம்பறிப்பதாகச் சில பொறாமைச் சித்தங் குடிகொண்டவர்கள் பிதற்றிவருகின்றனர். அன்னார்க்கு யாமொன்று கூறுவோம்: கேவலம் பணம் பறிப்பதே எம்முடைய நோக்கமாயின் அதற்கு இத்துணை இடையூறுகளினிடையேயும் எதிர்ப்பிரசாரத்தினூடேயும் இவ்வேலையில் யாம் இறங்கியிருக்கத் தேவையில்லை. சுமார் 15 வருடங்களுக்கு முன்னரே யாம் கலாசாலையில் பயின்றுவருங் காலையில் பற்பல சிறந்த நூல்களை எழுதி அதிலேசாக ஆண்டொன்றுக்கு 2,000 ரூபாய்க்குமேல் வருவாயைப்பெற்ற விஷயம் எம்முடனிருக்கும் பலருக்கும் நன்கு தெரியும். பொதுஜனங்களால் போற்றத்தக்க வேறு வழியில் பிரவர்த்திக்க முடியாமல் யாம் இத்தொழிலில் இறங்கிவிடவில்லை; இப்பொழுதும் முன்போல் பற்பல அரிய நூல்களை இயற்றமுடியாமலும் ஒன்றும் எமக்கு அசௌகரியம் உண்டாய்விடவில்லை. ஆனால் சுயநலத்தைக்காட்டினும் பொதுஜன சேவையே சிலாக்கியமென்று கொண்டதனால்தான் இதற்குவேண்டிய போதிய தன சகாயமொன்றும் எம்மிடம் இல்லாததனால் தங்களைப்போன்ற தனவான்களிடம் இதன்மூலம் அப்பீல் செய்துகொள்ளும்படியான அவசியம் நேரிட்டிருக்கிறதென்று அதிவினயமாய் அறிவித்துக்கொள்ளுகிறோம்.

இஸ்லாமிய ஊழியத்தில் பெரிதும் ஈடுபட்டிருக்கும் தங்களைப்போன்ற கனவான்களும் கண்ணியவான்களும் இப்பத்திரிகைக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கும் அற்பத் தொகையாகிய ரூ. 3 அல்லது ரூ. 4-ஐயே தாங்கள் பெறும் பத்திரிகா விஷயத்துக்குப் பிரதிப் பிரயோஜனமென்று கருதிவிடாமல், இதன் நோக்கத்தையும் இது மேன்மேலும் இடைவிடாமல் நடந்துவரவேண்டுமென்னும் ஊக்கத்தையும் முஸ்லிம் நண்பர்களாகிய தாங்களெல்லீரும் தங்களுடைய திவ்விய கருத்திலிருத்தி, "இதற்காக ஒருவருடச் சந்தாவைச் செலுத்திவிட்டோமே; இனி நாம் செய்யவேண்டுவதென்ன இருக்கிறது?" என்று சிந்தியாமல் தங்களாலான தன சகாயத்தைத் தாங்கள் ஒவ்வொருவரும் செய்யக் கடமைப்பட்டிருக்கிறீர்களென்று யாம் மிக மரியாதையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இனித் தங்களுடைய கடமையை நிறைவேற்றவேண்டுவது தங்களுடைய பொறுப்பேயாகும். இதுவோ தங்களுடைய கடமை; இப் பத்திரிகையோ தங்களுடைய பத்திரிகை; இக் காரியமோ தங்களுடைய காரியம். இதைக் கொண்டு நடத்த வேண்டுவது உங்களுடைய முயற்சியேயாகும். உங்களுடைய மிகத் தாழ்மையான பிரதிநிதியாகவே யாம் இருக்கின்றோம். இனித் தங்களுக்குச் சொல்லவேண்டுவது என்ன இருக்கிறது!

தங்களுடைய இப் பத்திரிகைக்குத் தங்களாலான எல்லாவிதமான உதவியும் புரியலாம். இதன் பிரயோஜனத்துக்காக நன்கொடையளிக்கலாம். ஒவ்வொருவரும் தம்மாலான பற்பல சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்பலாம். இன்னமும் எங்களுடைய புத்தக பத்திர பிரசுரங்களையும் ஒவ்வொருவரும் வாங்கி வாசிக்கும்படி தாங்கள் தூண்டுதலும் செய்யலாம். அல்லா(ஹ்)வுக் களிப்போர் எல்லா நலனும் எய்துவர். இகம் பரம் இரண்டிடத்தும் இது பயன்தரும். ஆதலின் அஸ்ஸலாமு அ'லைக்கும், அன்பர்காள்!

:காதி'முல் இஸ்லாம்: பா. தாவுத்ஷா.

மிஸ்டர் ஹம்பக்ஸன்

(ஒரு கட்டுரை)

மிஸ்டர் (இப்பால் ஸர்) ஹம்பக்ஸன் என்னும் துரையானவர் ஒரு கீர்த்திவாய்ந்த குடும்பத்தில் பிறந்தவரல்லர். சர்வ சாமான்யமான ஓர் ஏழை விதவையின் வயிற்றிலுதித்த மூன்றாவதான இளைய குமாரராவார். இவருடைய தகப்பன் பூட்ஸ் தைக்கும் தொழிலை மேற்கொண்டிருந்தார்; அவர் இறந்தபின் அவரது மனைவி தன்னுடைய மூன்று குமாரர்களுடன் ஸௌத் தாம்ட்டன் என்னும் பகுதிக்குச்சென்று அங்கோர் குக்கிராமத்தில் ஒரு சிறு "அங்காடி"க் கடையைத் திறந்துகொண்டார். அந்த அம்மாளின் மூத்தமகன் தோளில் மூட்டைகளைப் போட்டுக்கொண்டு கிராமம் கிராமமாய், தெருத் தெருவாய்த் துணிமணி விற்கக்கூடிய "ஹாக்கர்" வேலையில் அமர்ந்துவிட்டார்; இரண்டாவது மகனோ தந்தையின் தொழிலைவிடாமல் ஜோடு தைக்கும் வேலையிலமர்ந்தார்; மூன்றாவது மகனாகிய இந்த ஹம்பக்ஸன் என்பவன் ஒருவேலையுமில்லாமல் திண்ணைத்தூங்கிச் சோம்பேறியாய்த் தெருத் தெருவாய்த் திரிந்துவந்தான். ஜீவனத்துக்கு ஒன்றும் சம்பாதிக்காத சோம்பேறியென்னும் காரணத்தினால் இங்கிலாந்திலுள்ள இரகசியப் போலீஸாரும் இவனுடைய நடவடிக்கையைக் கவனித்து வந்தார்கள். வருஷக்கணக்

காய் எங்கெங்கும் அலைந்துபார்த்தும் இவனுக்கொரு கூலிவேலையும் கொடுப்பாரில்லாமற் போயினர்.

இவ்வாறிருக்கும்போது தன்னுடைய தாயின் முதற் கணவனுக்குப் பிறந்த மிஸ்டர் கப்பியான் என்னும் துரைமகனார் இந்தியாவில் ஜில்லாக் கலெக்ட்டர் வேலைபார்த்துவிட்டு லீவில் திரும்பிவந்து லண்டனைச்சார்ந்த ஹாம்ஸ்வொர்த்தில் ஓரிடத்தில் தங்கியிருப்பதாகக் கேள்வியுற்று அந்த "அண்ணாவை" யேனும் போய்ப் பார்க்கலாமென்று ஹம்பக்ஸன் புறப்பட்டுவந்தான். ரயிலுக்கும் பணமில்லாமல் திருட்டுத்தனமாகப் புகை வண்டியேறி லண்டனைநோக்கிப் புறப்பட்டான்; வழியில் டிக்கெட் செக் செய்கிறவர் வரும்போதெல்லாம் ரயில்வண்டியிலுள்ள கக்கூஸுக்குள் சென்று ஒளிந்துகொள்வான்; ஒருமுறை டிக்கெட் எக்ஜாமினர் வந்தபோது ஹம்பக்ஸன் அங்கிருந்த தன்னுடைய பால்ய சிநேகனொருவனை அழைத்துக்கொண்டு கக்கூஸுக்குள் சென்றுவிட்டான்; டிக்கெட்எக்ஜாமினர் சமீபத்தில் வரும்போது டிக்கெட் வைத்திருந்த ஹம்பக்ஸனுடையதோழன் கௌரவமாக அந்தக் கக்கூஸுக்குள்ளிருந்து வெளியில் வந்து அதன் கதவைச் சார்த்தித் தாழ்ப்பாள் போட்டுக்கொண்டு தன் டிக்கெட்டைமட்டும் காட்டிவிட்டுப் போய்விட்டான். இன்னும் அந்தக் கக்கூஸுக்குள் ஹம்பக்ஸன் ஒருவன் ஒளிந்திருந்ததை யறியாமல் டிக்கெட் எக்ஜாமினரும் போய்விட்டார். இவ்வாறாக நல்ல விதமாய் ஹம்பக்ஸன் ஹாம்ஸ்வொர்த் சென்று அங்கிருந்த தன் மாற்றாந்தந்தையின் மகனாகிய கப்பியான் என்னும் கலெக்ட்டரைக் கண்டுபிடித்தான்.

ஹம்பக்ஸன்: அண்ணா, காலை வந்தனம்! என்னைத் தங்களுக்குத் தெரிகிறதோ?

கப்பியான்: ஏதோ பல வருஷங்களுக்குமுன் உன்னை எங்கேயோ பார்த்தாற்போலிருக்கிறது.

ஹம்: அண்ணா! நான் தங்களுடைய தாயின் குமாரனல்லவா? என். தந்தையார்—

கப்: ஓஹோ! நீ மிஸ்டர் பார்பருடைய இளைய குமாரனல்லவா? உன்னுடைய பெயர்—

ஹம்: நான்தான் ஹம்பக்ஸன் அண்ணா! என்று கூறி, அண்ணாவைக் கட்டிக்கொண்டான். இருவரும் கட்டியணைத்துக் கலக்கந்தெளிந்த பின்னர்,

கப்: தம்பீ! நீஎன்ன செய்துகொண்டிருக்கிறாய்? உன் அண்ணன்மார் இருவரும் எங்கே யிருக்கிறார்கள்? தாய் க்ஷேமந்தானோ? உன் பிதா சில வருஷங்களுக்குமுன் இறந்துவிட்டாரென்று நான் இந்தியாவிலிருந்த பொழுது கேள்விப்பட்டேனே.

ஹம்: ஆம் அண்ணா! பிதா இறந்துபோனார். அவருடைய தொழிலை என் நடு 'அண்ணா' பார்த்துவருகிறார்; தந்தையாரைக்காட்டிலும் மிக நல்லமாதிரியான பூட்ஸ்களெல்லாம் தயார்செய்கிறார். மூத்தவரோ 'ஹாக்கர்' வேலைசெய்கிறார். தாயோ 'அங்காடி' வியாபாரம் செய்கிறார்.

கப்: தம்பீ! நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்? உனக்கு விவாகமாய்
விட்டதா?

ஹம்: பிண்டத்துக்கே திண்டாடும்போது பெண்டாட்டி வேறுவேண்
டுமோ? அதிருக்கட்டும்; அண்ணா! தங்களூரில் எனக்கேதேனும் கூலிவேலை
கிடைக்குமோ?

கப்: இந்தியாவிலா? கூலிவேலையா கேட்கிறாய்? அங்கே வந்தால்
உனக்கு நல்ல உத்தியோகங் கிடைக்குமே.

ஹம்: உத்தியோகமா! எனக்கு ஏ, பீ, ஸீ, டீ, தவிர எழுதப் படிக்
கத் தெரியாதே! அண்ணா! இந்தியாவில் பவுன்மரம் காய்க்கின்றதாமே! அத
னால் அத் தேசத்தினர் ஒருவேளை சாப்பிட்ட பாத்திரங்களை * மறுவேளை
உபயோகிக்காமல் தெருவில் எறிந்துவிடுவார்களாமே! அங்குள்ளோர் தங்க
ளுடைய குழந்தைகளைக் கங்கையாற்றிலுள்ள முதலைகளிடம் எறிந்து, அவை
மோக்ஷம் போகின்றனவென்று நினைக்கிறார்களாமே! இன்னும் கண
வன் இறந்தால் மனைவியும் அவனுடன் காஷ்டத்தில் படுத்து எரிந்துவிடு
கிறாளாமே! ஈதெல்லாம் இருக்கட்டும். அண்ணா! அத் தேசத்தில் செல்
காய்க்கும் மரங்கள் அளவிறந்தன இருக்கின்றனவாமே? தாங்கள் 'பார்த்தி
ருக்கிறீர்களா? அந்த மரம் எவ்வளவு உயரமிருக்கும்?

கப்: தம்பீ! அதெல்லா மிருக்கட்டும். உனக்கு இஷ்டமிருந்தால்
என்னுடன் வா; இந்தியாவில் உன்னைப்போன்ற துரைமகன்களுக்குச் சில
டிப்பார்ட்மெண்ட்டுகள் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கின்றன; அவற்றில் 'இந்தி
யர்களை அதிகம் நுழையவிடுவதில்லை: அவை ஆப்காரி, போலீஸ், தபால்
தந்தி, ரயில்வே. இவற்றிற்கெல்லாம் நம்மவருக்கு இந்தியாவில் எழுதப்
படிக்கத் தெரியவேண்டுமென்னும் அவசியமில்லை.

ஹம்: அண்ணா! ஆப்காரி யென்றால் என்ன? அது எனக்கு விளங்க
வில்லையே?

கப்: தம்பீ! அதுதான் விஸ்கீ, ஒய்ன், பீர், ஜின், பட்டை அரக், கள்,
சாராயம், கஞ்சா, அபின், பங் முதலியவை சம்பந்தமான கலால் இலாக்கா
வாகும்.

ஹம்: அண்ணா! கள், கஞ்சா, அபின், பங் என்பன யாவை?

கப்: அதிருக்கட்டும். மேற்சொன்ன நாலு டிப்பார்ட்மெண்ட்டுகளில்
சேர்ந்துகொள்ள உனக்கு இஷ்டமுண்டா சொல்? இன்றே கப்பலுக்குப்
பிரயாணச்சீட்டு வாங்கிவிடுவோம்.

ஹம்: அண்ணா! என்னைக்காட்டினும் படித்த இந்தியர்கள் அங்கே
அதிகமிருப்பார்களே?

கப்: உனக்கென்ன அதைப்பற்றி? முன்சொன்ன நாலு டிப்பார்ட்
மெண்ட்டுகளுக்கும் நம் துரைமக்களுக்குப் படிப்பு வேண்டியதில்லை. டாம்,
பிளடி, பெக்கர், பெல்லர் என்று திட்டவும் உதைக்கவும் தெரிந்தால்

---

* ஹிந்துக்கள் எச்சில் இலைகளை எறிந்துவிடும் பழக்கத்தைப்பற்றி
இவ்வாறு அவன் கூறினான்.

போதும். இந்த டிப்பார்ட்மெண்ட்டுகளின் மேல்உத்தியோகங்களில் திற
மையுடன் வேலைபார்க்க எந்த இந்தியனுக்கும் யோக்கியதை இல்லையென்
றும், ஈதெல்லாம் இங்கிலாந்திலிருந்துவரும் சீமை துரைகளால்தான் முடியு
மென்றும் நாங்கள் இந்தியரை ஹம்பக் செய்து வைத்திருக்கிறோம்; அங்கே
வந்தால் மாதம் 50 பவுன் சம்பளத்துக்கு நான் ஸிபாரிஷ் செய்வேன்; இஷ்
டமானால் புறப்படு.

ஹம்: அண்ணா! எனக்கு உத்தியோகமே பிடிக்கவில்லை. இந்தியாவில்
எனக்கு வேறேதேனும் வேலை கிடைக்காதோ?

கப்: "அப்படியானால்—இன்னொருவேலை இருக்கிறது; தோட்டக்
கார முதலாளியாக ஆய்விடலாம்.

ஹம்: தோட்டம்வாங்க என்னிடம் காசில்லையே?

கப்: அடே முட்டாள்! உனக்கென்ன ஒன்றும் தெரியவில்லையே.
இந்தியாவில் ஆங்கிலேயருக்கிருக்கும் செல்வாக்கு உனக்கொன்றும் தெரி
யாது. அங்கே சென்றால் ஒரு கால்கடுதாசியில் ஒரு தர்க்காஸ்து விண்ணப்
பம் போடலாம்; எந்த ஜில்லாவில் நிலம் வேண்டுமோ அந்த ஜில்லாக்
கலெக்டருக்கு நான் உன்னைப்பற்றி ஸிபாரிஷ் செய்வேன்; உடனே ஒரு
மலைச்சாரலில் ஆயிரம் ஏக்கர் நல்ல நிலம் கிடைக்கும்; உடனே அதை அங்
குள்ள—பாங்கில் கொதுவை வைத்துப் பணம் வாங்கலாம். இந்தியாவி
லுள்ள—பாங்குகளில் நம்முடைய சர்க்கார் பணமானது கோடிக்கணக்
காய் வட்டியில்லாமல் கிடக்கிறது; இதனால்தான் அந்தப் பாங்குகளில் 25
ரூபாய் சம்பளமுள்ள ஓர் இந்தியன் பார்க்கக்கூடிய வேலைக்காக 50 பவுன்
சம்பளத்தில் இங்கிருந்து துரைமக்களைக் கொண்டுபோகிறோம். இவர்களு
டைய சம்பளம் அதிகமாகவும் இவர்களுக்கு வேலை ஒன்றுமில்லாமலும்
இருப்பதனால்தான் இப்படிப்பட்ட—பாங்குகளில் இங்கிலீஷ்காரரையே மிகு
தமாக வைக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு பாங்கில் உன்னுடைய ஆயிரம்
ஏக்கரையும் அடமானமாக வைத்துக்கொண்டு உடனே நாலாயிரம் ரூபாய்
கடன்கொடுப்பார்கள்; உடனே ரூபா மூவாயிரத்துக்கு ஒரு பஸ்ட் க்ளாஸ்
மோட்டார்கார் வாங்கிவிடு; திண்டுக்கல் ஸ்பென்ஸர் சுருட்டை வாயில்வைத்
துக்கொண்டு மோட்டாருடன் உன்னுடைய மலைக்குச்சென்று மிகுதி ரூபா
ஆயிரத்தைக்கொண்டு தேயிலைத் தோட்டமேனும் காபித்தோட்டமேனும்
பயிரிடு.

ஹம்: அண்ணா! தோட்டத்துக்குக் கூலியாட்கள் எங்கே கிடைப்
பார்?

கப்: தம்பீ! தினக்கூலி 3½ அணாவுக்கு ஒரு புருஷனும் பெண்ஜாதி
யும் நான்கு மக்களுமாகப் பதினாயிரம் கூலிகள் ஒரேமாதத்தில் கிடைப்பார்
கள்; இதற்காகக் 'கங்காணி'களும் 'மேஸ்திரி'களும் உண்டு; அவர்களைச்
சரிப்படுத்திக்கொண்டால் எல்லாம் சரியாய்விடும். அரசாங்கமோ நம்மு
டைய அரசாங்கம்; ஒருசமயம் கோபத்தினாலோ அல்லது தாபத்தினாலோ
ஒரு தோட்டக்கூலியைத் துப்பாக்கியால் சுட்டுவிட்டாலும் அவனுடைய
பாஷை தெரியாததனால் திருடனென்று நினைத்துக் கொன்றுவிட்டேன்


னென்ருல் ஜயம் நம்முடைய பக்கம்தான். தோட்டக் கூலிகளால் என்ன முடியும்?

ஹம்: நல்லது அண்ணு! நான் தாயாரைப் போய்க் கலந்துகொண்டு வந்து தெரிவிக்கிறேன், என்று விடைபெற்றுக்கொண்டு அந்தத் துரை மகனுர் புறப்பட்டுவிட்டார்.

ஹம்பக்ஸன் திரும்பிச்செல்லும்போது கீழேகிடந்த ஒரு காகிதத்தை எடுத்துப்பார்த்தான்; அதில் ஜார்ஜ் கப்பியான் ஐ. ஸீ. எஸ்., ஸீ., ஐ. ஈ., ஐ. எஸ். ஓ., என்று எழுதியிருப்பதைத் தட்டித் தடவிப் படித்துவிட்டு, இதென்ன! நம் அண்ணுவுக்கு அரிச்சுவடி எழுத்துக்களெல்லாம் ஆட்டுக்குக் கழுத்தில் தோல்மணிகள் தொங்குவதேபோல் தொங்குகின்றன? என்று எண்ணிக்கொண்டே போனுன்.

* * * *


இப்படிப்பட்ட துரையே இப்பொழுது ஸர் பட்டத்துடனும் கே. ஸீ. ஐ. ஈ. பட்டத்துடனும் எம். எல். ஏ. பட்டத்துடனும் பெரிய தோட்டக்கார முதலாளியாக, அதிக அட்டகாசத்துடன் இந்தியாவில் ஒரு பெரிய தோட்டக்காரர்களின் சங்கப் பிரஸிடெண்ட்டாகவும் ஒரு—பாங்கின் டைரெக்ட்டராகவும் கவர்னர்ஜனரல் முதலானவர்களுடன் சம போஜனம் செய்யக்கூடிய ஒரு மகா கோடீசுவரராகவும் ஒரு டஜன் ரோல்ஸ் ராய்ஸ் மோட்டார்கார்களுடன் இந்தியாவில் இலங்குகின்ருர்.



இமாம் ரா:கிப்' அவர்கள் யார்?

(கஷ்'புள்'ளு'னூன் முதலான மூலகிரந்தங்களிலிருந்து எழுதப்பட்டது)

"ரா:'கிபெ' இஸ்' 'பஹானி" என்று வழங்கப்பட்ட அவர்களின் பெயர் இமாம் அபு'ல்:காஸிம் 'ஹுஸைன் என்பதாகும்; அவருடைய தகப்பனுர் பெயர் மு'ஹம்மத்' பாட்டனுர் பெயர் 'பல்'ல் என்பனவாம். ஐந்தாவது நூற்ருண்டின் ஆரம்பத்திலிருந்தவர். இமாம் 'பக்'ருத்தீன் ரா'ஜீயவர்கள், 'தாஸீஸுத் த:க்தீ'ஸ் என்னும் நூலில் "நிச்சயமாக ரா:'கிப'வர்கள் ஸுன்னத்தின் இமாம்; :'க'ஜ்'ஜாலி இமாமவர்களின் காலத்திலுள்ளவர்," என்று சொல்லியிருக்கிருர்கள். இமாம் ரா:'கிப'வர்கள் எழுதிய :குர்ஆன் ஷரீ'பின் விரிவுரை ஒன்றுண்டு; அதிலிருந்துதான், இமாம் பை'ல'ாவீ யவர்கள் தங்களுடைய அனேகவிதமான ஆராய்ச்சிகளை எடுத்துத் தங்கள் கிரந்தத்தில் எழுதியிருக்கிருர்கள். மேலும் ரா:'கிப்' இமாமவர்கள் எழுதிய "அல்மு'ப்ரதா'த்" என்ருெரு (:குர்ஆனுக்கு அகாதி) கிரந்தமுமுண்டு; அக்கிரந்தத்தை நோட்டமிடுகிறவன், அவருக்கு ஆராய்ச்சியிலுள்ள திறமையையும், அவரின் விசால நோக்கத்தையும், பூரண வன்மையையும், பெருந்தன்மையையும் செவ்வனே தெரிந்துகொள்வான். இன்னமும் அவர் அக்கிரந்தத்தில், ":குர்ஆன் ஷரீ'ப் சம்பந்தமாக முதன் முதலாகத் தெரிந்துகொள்ளவேண்டியது இது தான் (:குர்ஆன் ஷரீ'பின் இந்த அகராதிதான்)" என்று எச்சரிக்கை செய்துள்ளார்; மேலும் அதில் அன்னியபாஷைப் பதங்களுக்கிடையிலுள்ள சம்பந்தா சம்பந்தத்தைப்பற்றியும், இன்னும் எந்த எந்தப் பதங்கள் எது எதிலிருந்து பிறந்திருக்கின்றனவென்பதையும், அவ்வவற்றின் மூலப்பொருள்களையும் முக்கியமாகக் கவனித்திருக்கிருர். மேலும் அதில் அவர் புத்திமதியை ஸ்திரமாகச் செய்யும்படியானவற்றையும் ஆன்மாக்களை உத்ஸாகப் படுத்தும்படியானவற்றையும் அதிகமாகப் புகுத்தியுள்ளார். எவ்விதத்தாலும் அவர்கள் ஓர் இமாம்; அவருக்கு மட்டில்லாமேன்மையுண்டு. இதுவுமல்லாமல் ஸுயூ:'தீ இமாமவர்கள், "அல்இ:'த்:கான் 'பீ உ'லீமில் :குர்ஆன்" என்னும் கிரந்தத்தில் பின்வருமாறு கூறுகிருர்கள்: ":குர்ஆனின் அகாதிகளைப்பற்றி எழுதுவதற்கு அளவிறந்த மனிதர்கள் தலைப்பட்டிருக்கின்றனர். அவர்கள் எழுதியவற்றுள்ளெல்லாம் பிரக்யாதி பெற்றவைகளுள் அதிக அழகுள்ளது ரா:'கிப்' அவர்களின் மு'ப்ரத்'ாத்தே." ஆண்டவன் அவர்கட்கு அருள்பாலிப்பாஞக. இப்படிப்பட்ட பெருமைவாய்ந்த பெரியாரே இமாம் ரா:'கிப்' என்னப்படுபவர். இவரைப்பற்றி இனியேனும் நீங்கள் நன்குணர்ந்துகொள்ளுவீர்களாக.



பெரியோர்களின் சமாதியின் முன்னிலையில் நடக்கும் அதிக்ரமங்களும் அட்டூழியங்களும்.

(இவரது அபிப்பிராயத்துக்கு யாம் ஜவாப்தாரியல்லேம். ப-ர்.)

அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்லா(ஹ்)வின் திருநாமத்தால்.

நமது பெருமானுர் முஹம்மது முஸ்தபா அஹ்மது முஜ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் அரபுநாட்டிலே மக்காவென்னும் நகரில் திருவவதாரம்புரிந்த அக்காலத்தில் அந்த அரபுநாடுமட்டுமல்லாமல் முழு உலகமும் அந்தகார அஞ்ஞானத்திலும், விக்கிரக ஆராதனையிலும், வியபிசாரத்திலும் வீழ்ந்து அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தது. நமது பெருமானுர் அவதாரம் புரியுமுன் அவர்கள் தந்தை அப்துல்லா அவர்கள்

தேகவியோகமடைந்துவிட்டார்கள் ; மேலும் அவர்கள் தாயாராகிய ஆமினா
அவர்களும் நம் பெருமானாரின் ஆறாவது வயதிற் காலகதியடைந்துவிட்டார்
கள். பாவம்! அன்னையும் பிதாவுமற்ற நம் பெருமானார் நாளுக்கு நாள்
இவ்வுலகம் அழுந்தி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருப்பதை நினைத்து நினை
த்து ஆண்டவனுக்கு ஓயாது வணக்கம்புரிந்துவந்தார்கள். அவர்கள் என்
றும் ஆழிய தெய்வபக்தியும், அத்தியந்த விசுவாசமும், ஆத்மஞான முதிர்ச்சி
யும், அன்பும் ஆதரவும், சௌலப்பிய சாத்யீகமும், சீரும் சிறப்பும், மேன்
மையும் கம்பீரமும், கீர்த்தியும் பிரதாபமும், சகோதரத்வ சமத்துவமும்,
சகலவித சம்பத்தும் நிறைந்த ஒப்பற்ற ஒரு மஹாபுருஷராக வாழ்ந்துவந்
தார்கள். அவர்களுடைய நல்லொழுக்கத்தையும், நற்குணத்தையும், சன்
மார்க்க சாதுர்யத்தையும், ஆழிய தெய்வபக்தியையும், யுக்தியையும் ஆண்ட
வன் சோதித்து, தன்னுடைய "இஸ்லாமார்க்கத்தை"ப் பரவச் செய்யச்
சக்தியுடையவர் இந்தச் சத்திய சற்குணசீலராகிய நம்பெருமானாரவர்களே
யென்று நிதானித்து நம்பெருமானாரவர்கட்கு 40-வது வயதில் அவர்கள்
ஹிராவென்னும் குகையில் தனித்திருந்து தவம்புரிந்துகொண் டிருக்கையில்
அல்லாஹுத்தஆலா நுபுவ்வத்தை யிறக்கினான்.

ஆண்டவனிட்ட கட்டளையைத் தம் தலைமேற்கொண்டு சுத்த சத்திய
சம்பூர்ண திருமறையின் சொற்படி சிறிதும் வழிதவறிப்போகாமல் முத்தி
தரக்கூடிய சத்திய நீதியமைந்த தீனுல் இஸ்லாத்தைச் சிறிது சிறிதாகப் பர
வச்செய்தார்கள். இவர்கள் போதிக்கும் ஞானோபதேசத்தையும், நற்குண
விசேஷத்தையும் பார்ப்போர் அகமகிழ்ந்து தீனுல் இஸ்லாத்தைத் தழுவி
னார்கள். இப்படி முதன் முதலில் சேர்ந்தவர்கள் ஹஜரத் அபூபக்கர் சித்
தீக் (ரலி) ஹஜரத் உமர்கத்தாப் (ரலி) ஹஜரத் உதுமான் (ரலி) ஹஜரத்
அலி (ரலி) இவர்களாவார்கள். இவர்கள்தாம் நமது நபிநாயகம் ஸல்லல்
லாஹு அலைஹிவஸல்லமவர்களோடு தீவிரமாய் உழைத்துவந்தார்கள்.
இஸ்லாமார்க்கம் நாளுக்குநாள் அபிவிருத்தியாகிக்கொண்டே வந்தது ; பல
தேசங்களுக்கும் தூதுகளனுப்பி ஜெயம்பெற்றுவந்தார்கள். இவ்விதமாக
இஸ்லாத்தைப் பரவச்செய்து தீச்செயல்களினின்றும் நல்லொழுக்கத்தில்
இழுத்தார்கள். நமது நபிபெருமானார் வபாத்தானபிறகு அவர்களுடைய
அன்புமிக்க அருமைத்தோழர்களாகிய மேற்கூறிய நால்வரும் தீனுல் இஸ்
லாத்திற்கு உழைத்துவந்தார்கள். இவர்கள்தாம் எகிப்து, ஸிரியா, ஆசியா
மைனர், துர்க்கிஸ்தான், ஆப்கானிஸ்தான், இந்தியா முதலிய நாடுகளுக்குப்
போய் இஸ்லாத்தைப் பரவச்செய்தார்கள். இவர்களுக்குப் பின்னால் ஒலி
மார்களும், குதுப்மார்களும், இஸ்லாமிய வீரர்களும் பற்பல ஊர்களுக்கும்
போய், தீனுல் இஸ்லாத்தை விதைத்தார்கள். இதுபோல் நம் மிந்திய நாட்
டிற்கு வந்தவர்கள் காஜாமுஹினுத்தீனொலி, ஷாஹுல் ஹமீதொலி,
ஷெய்குதாவூத் ஒலி, சையதிபுறுகீம் ஒலி, ஷம்ஸுத்தீனொலி இன்னும்
அநேக ஒலிமார்களும், குதுப்மார்களும் வந்தார்கள். இவர்கள்தாம் விக்கிரக
ஆராதனையிலும், அந்தகாரத்திலும் அழுந்திக்கிடந்த அஞ்ஞானிகளாகிய
நம்மை (நம் முன்னோர்களை) மெய்ஞ்ஞான அறிவுக்குரிய வழியைப் பின்பற்

றச்செய்தும், வீணான விஷமத்தனங்களையும், துன்மார்க்க துஷ்கிருத்தியங்
களையும் விலக்கி, நல்லொழுக்க நற்செய்கைகளையும், சன்மார்க்க சற்குணங்
களையும் துலக்கி அறிவுச்சுடர் புகட்டவல்லதாகிய ஆண்டவனின் திருமறை
யை ஊற்றி அவ்வஞ்ஞானிகளனைவரையும் மெய்ஞ்ஞானக் கீர்த்திபெற்ற
சத்தியசம்பூர்ண தீனுல் இஸ்லாத்தில் நுழையச்செய்தார்கள். (இவர்களுக்கு
ஆண்டவனுடைய கிருபையும் நல்மாசாயமும் உண்டாவதாக.)

இத்துணை உன்னதமேவிய புண்ணிய பூமான்களின் சன்னிதிகளைக்
கண்ணியப்படுத்தும் நீதிமுறை யொருவிதமிருக்க, என்னென்னவோ அனா
சாரமான அட்டூழியங்களும், துராகிர்தமான தீச்செயல்களும், துன்மார்க்க
துஷ்கிருத்தியங்களும், கூடாத கொடுமைகளும், தகாத செயல்களும்,
அடாத அகம்பாவங்களும், விஷமத்தனமான வீண் டம்பங்களும், அருவருக்
கத்தக்க ஆபாஸங்களும், தூர்த்தர்கள் துஷ்டமும், குடியர்கள் குரங்குச்சேஷ்
டையும், பாவையராட்டமும், பாவலர் பாட்டமும், சங்கீத கோஷ்டமும்,
சதுர்க்கச்சேரியும், ஷைத்தான்கொண்ட சகலவித துஷ்டத்தனங்களும் நிகழ்
கின்றன. அப்பெரியார்களுடைய சமாதியின் முன்னிலையில் நடக்கும் அதிக்
கிரமங்களையும், அட்டூழியங்களையும் என் கண்கூடாகப் பார்த்தவைகளை
மாத்திரம் ஈண்டுக் கூறுவேன்:

பெரியோர்கள் வபாத்தான நாளை யொரு உத்ஸவமாகக் கொண்டாடு
கிறார்கள். இந்தப் பெரியோர்களுடைய சமாதிகள் பெரும்பாலும் நகரங்களை
யும் ஊர்களையும் சமீபித்திருப்பதால் அவ் வுத்ஸவத்தைக் கொண்டாடப் பல
தெருக்கக்ஷிகளு மிருக்கின்றன. சந்தனக்கூடுகளும், கப்பல்களும் கொண்ட
உத்ஸவமே எங்கும் நடக்கின்றது. இப்பெரிய உத்ஸவநாளைக்குச் சுமார்
10 அல்லது 14-நாட்களுக்குமுன் ஒரு சிறிய உத்ஸவம் நடந்தேறுகிறது.
இதுதான் மறதியாய் இருக்கும் ஜனங்களை ஞாபகமூட்டும் ஓர் தண்டோரா
வாயிருக்கிறது. இதன்பெயர்தான் "கொடியேற்றம்" என்று சொல்வது.
இவ் வைபவத்திற்காக வீதியெங்கும் புஷ்பப்பந்தல்களாலும், விசித்திர ஜாலர்
களாலும், ஜோதிப்பிரகாசமான ரஸக்குண்டுகளாலும் அலங்கரிக்கப்பட்டிருக்
கிறது. ஒவ்வொரு கக்ஷியாரும் தத்தம் பந்தல்களில் கோலாட்டங்களும்,
குஷ்திகளும், சதுர்க்கச்சேரிகளும் நடத்துகிறார்கள். சுமார் பகல் 2-மணிக்
குப் பலகக்ஷிகளும் பலவித வேடிக்கைகளுடன் தயாராயிருக்கின்றன. வனர்
பிறைக்கொடிகளாலும், வாளாயுதங்களாலும், அம்பு அரிவாள்களாலும்,
கத்தி கட்டாரிகளாலும் அலங்கரிக்கப்பட்ட ரதம் நடுவிற் பச்சைப்போர்வை
போர்த்திய புரவிகளுடன் பூட்டிநிற்க, 18-வாத்தியங்கள் பூர்த்தியுடன் நேர்த்
தியாய் முழங்கிட, நடனமாதர்கள் ஆரங்கொண் டாலவட்டம் வீசிட, சங்கீத
மேளதாளம் தளபுளவென்றிட, அங்குள்ள அனைவரும் ஆவேசம்கொண்டிட,
பங்கமிலாச் சிங்கப்பயில்வான்கள் பலருங் குலாவிட, பாராவில் நிற்கும் பட்டா
ளத்து ஸிப்பாய்க ளணிவகுத்து நின்றிட, காசுக்குப் பத்துப்பாட்டுக்கள்பாடும்
கலியுக கவிஞர்கள் கவிகளெடுத்தோதிட, பிசாசைப்போல் திரியும் குடிவெறி
யர்க ளுருண்டு புரண்டிட, பள்ளிப்பிள்ளைகள் மங்களம்பாடி வாழ்த்திட, சல்
லிக்குணம் கற்ற புல்லர்கள் துள்ளிச் சிலம்பமடித்திட, பள்ளி பறைச்சிகள்

குரலை தொனித்திட, இவ்வித ஆரவாரத்தோடும் ஒவ்வொரு கக்ஷியாரும்
தாம் தாம் முன் சென்று கொடியை யேற்றவேண்டுமென்று பரபரப்புட
னும், வீரா வேசத்துடனும் போக எத்தனிக்கையில் ஒருவருக் கொருவர்
முரண்பட்டு ஒருவரை யொருவர் முன் போகாதபடி மறிக்கவே பெருங்கல
கங்களும், சண்டை சச்சரவுகளும் நேரிட்டு மண்டைகளுடைந்து முகம் குப்
புறக்கிடப்பவர்களும், கை கால் முறிந்து மெய்ம்மறந்து கிடப்பவர்களும்,
கூட்டத்தில் சிக்குண்டு நசுங்கிய சிறுவர் சிறுமிகளுடைய அவஸ்தைகளும்,
அடிபட்டிறந்த பிணங்களுமாய்க் காணப்படுகின்றனர். இத்துணை யாரவாரத்
தோடும், இரத்தா வேசத்தோடும், வீரா வேசத்தோடும், அளவிற்கு விஞ்சிய
அதிக்ரமங்களோடும், அப் புண்ணிய பூமான்களுடைய சமாதியின் முன்னி
லையில் அச்சம் நாணமில்லா இந்த நிரக்ஷர குக்ஷிகள் அலட்சியமாய் நுழை
கிறார்கள்; நுழைந்து, உருண்டு, புரண்டு என்னென்னவோ செய்துவிட்டு
அடிபெருத்து நுனிசிறுத்த வொரு மாத்தில்—வர்ணமிட்டுச் சந்தனம்,
புனுகு, ஜவ்வாது, லவண்டர் முதலிய வாசனைத் திரவியங்களை யதன்மேல்
தெளித்து, மல்லிகை முல்லை முதலிய மலர்ந்த ரோஜாப் புட்பங்களாலும்
அலங்கரித்து நட்டிருக்கும் அந்த மரத்தின் நுனியில்—போய்ச் சேரும்படி
ஒரு வளர்பிறைக்கொடியைச் சாம்பிவிடுகிறார்கள். (இந்த ஓர் அற்ப காரியத்
திற்காக எத்தனை கொலைகளும், செலவுகளும் நேரிடுகின்றன? இதை யவர்
கள் அறிவார்களா?) இந்தச் சிறு உத்ஸவம் இவ்விதக் கோலங்களோடும்
வியாகூலங்களோடும் நடந்தேறுகிறது. இதிலிருந்து பெரிய உத்ஸவம் வரும்
வரையில் பல ஊர்களிலிருந்தும் பார வண்டிகளிலும் ரயில்வண்டிகளிலும்
லக்ஷக்கணக்கான ஜனங்கள் வந்துசேர்கிறார்கள். உண்மையாகப் பெரி
யோர்களின் சமாதியைத் தரிசனம் பண்ண வருபவர்கள் ஒருவருமே கிடை
யார். எல்லா ஜனங்களும் இந்த வைபவ வேடிக்கைகளைப் பார்ப்பதற்கே
செலவுசெய்து தொலைதூரங்களிலிருந்து வருகிறார்கள். கொடியேற்றத்து
நாளிலிருந்து பெரிய உத்ஸவம் முடியும் நாள் வரை நகரமுழுதும் ஆழிய
ஆனந்த சாகரத்தில் மூழ்கியிருக்கிறார்கள். பணம் சம்பாதிக்க, எந்த ஊர்
கோவிலில் அல்லது தர்காக்களில் உத்ஸவம் நடைபெறுமோ வென்று காத்
துக்கொண்டிருக்கும் விபசாரிகளும், மதுபான வியாபாரிகளும், பாதகச்
சூதுக் கடைக்காரர்களும், கள்ள ஞானிகளும், பக்கீர்களும், மஸ்தான்களும்
அங்குவந்து கூடாரங்களும், குடிசைகளு மடித்துக்கொண்டு குதூகலமாய்
இருக்கின்றார்கள். அக் குடிசைகளில் நடக்கும் துஷ்கிருத்தியங்களும், துரா
கிர்தங்களும் வேறெந்த நாடுகளிலும் நடக்காதென்றே சொல்லவேண்டும்.
(ஆனால் மேல் நாடுகளில்..........!) இப்படிப்பட்ட ஆபாஸமான அரு
வருப்புக்களால் சூழப்பட்டிருக்கிறது. (நவூது பில்லாஹிமின் கதாலிக). இனி
மேல் பெரிய உத்ஸவத்தைப்பற்றி விவரிப்போம்:

இரவு சுமார் 12-மணிக்குமேல் மூங்கிற்சிம்பாலும் அபிரேகத் தகட்டா
லும் ஜரிகைகளாலும் கண்ணாடிகளாலும் பலவர்ணக் காகிதங்களாலும்
சோதிப்பிரகாசமான விளக்குக்களாலும் அலங்கரிக்கப்பட்ட சந்தனக்
கூடொன்றும், மாதிரிலும் மட்டைகளாலும் செய்யப்பட்டுப் பலவிதவர்

ணங்களாலும் கொடிகளாலும் சோடித்தவொரு போலிக் கப்பலும் கூட்டத்
தின் நடுவில் புரவிகளால் இணைக்கப்பட்டுநிற்க, சங்கீத சுரதாளம் மேளம்
தத்தளித்திட, விந்தையதாய்ப் பெட்டிவாணமும் புதைவாணமும் விரைந்
திடும் சூர்வாணமும் படீர் படீரென்று கிளம்பிட, மத்தியில் பத்திப் பத்தி
யாய்ப் பல நிற மத்தாப்புக்கள் ஜொலித்திட, மும்முரமாய்ச் சிலம்பம் தீப்
பந்தம், கட்டாரி கத்தி விளையாட்டுக்கள் கலகலவென்று சப்தித்திட, பம்
பரம்போல் சுற்றிப் பாய்ந்திடும் குஷ்திகள் பார்ப்போர் மனதைக் கவர்ந்
திடக்கூடிய கண்ணியமான நுண்ணியகாட்சிகள் கண்டவிடமெல்லாம் தலை
விரித்துத் தாண்டவமாடிட, கம்பீரமான காட்சிகளும் சூழ்ச்சிகளும் எத்
திசையும் நிறைந்திட, வீண்பிரலாபமான சந்தனக்கூடு வீதியெங்கும் ஊர்
கோலம் சுற்றிச்சுற்றி வந்திட இவ்வத்துணை யாரவாரத்தோடும் ஆடல்
பாடல்களோடும் நம் புண்ணியமிகுந்த பூமான்களின் சன்னிதிக்குள் அலட்
சியமாய் நுழைகிறார்கள். அன்றிரவு பூராவும் நிகழும் துன்மார்க்கத் தீச்
செயல்களுக்கும், அனாசார அட்டூழியங்களுக்கு மோரளவில்லை. சுமார் 20
அல்லது 25-அடி நீளமும், 8 அல்லது 10-அடி அகலமும், 2 அல்லது 3-அடி
ஆழமுமுள்ள பள்ளங்களில் மட்டைகளையும், மரங்களையும் போட்டெரித்
துத் தீ கங்குமயமாக விருக்கும்போது சிலர்கள் என்னென்னவோ வாயை
முணுமுணுத்துக்கொண்டு ஆ, ஹூவென் றாவேசத்துடன் அலறிக்கொண்
டும் ஊளறிக்கொண்டும் அந்த ஆழிய அக்கினிக் கிடங்குகளில் ஆடுவதும், ஓடு
வதும், நடப்பதும் குதிப்பதுமாயிருக்கிறார்கள். இத் தீக்கிடங்குகளில்
இறங்கி ஆடி ஓடி விட்டால் அவர்கள் செய்தபாவம் விலகிப்போமாம்.
(அவர்களந்த சூக்ஷமலோக நரகிற்பட்டழுந்துவதற்கு இதுவொரு சுழுனை
வென்றறியார்கள்போலும்!) இவ்வித நரகத்துக் கொள்ளிக் கட்டைகளா
லேயே நம் பூமான்களின் சன்னிதிகள் சூழப்பட்டிருக்கின்றன. (நவூது
பில்லாஹி மின்ஹா). என்றைக்கிந்த அனாசார அட்டூழியங்கள் வேரோ
டறுக்கப்படுமோ? அவ்வாறு முடியுமோ? அதுவுமன்றே! இதுமட்டுமா!
இன்னுமநேகமிருக்கின்றன. மாவையரைவதுபோல் சிலர்கள் தத்தம் மார்
பில் கைகொண்டறைவது டய்னமைட் போன்ற சப்தமுழக்கமே எண்டிசை
யும் குமுறிக்கொண்டேயிருக்கிறது. ஐயோ பரிதாபம்! அவர்களுடைய
மார்புகளைப் பார்த்தால் புளிப்பேறிய இட்லிபோல் உப்பிப்போயிருக்கி
றது. (இதனால் அவர்கள் செய்த பாவம் பறந்தோடிடுமாம்.) என்னே
யிவர்களறியாமை! இன்னும் புலிகள் மாதிரியும், வேடர்கள் மாதிரியும்
வேஷங்கள் பூண்டு கூட்டத்தில் துள்ளிக் குதித்திடவும், தாவிப்பாய்ந்திட
வும், உரக்க உறுமி விழிகளை மிரட்டி உருட்டிப் பார்த்திடவும், பாமர ஜனங்
கள் பயந்தோடிடவுமான செய்கைகள் அநேகம் ஆங்காங்கே ததும்பிக் கிடக்
கின்றன. பெண்பிள்ளைகள் சமாதிகளுக்குப்போவது கூடாதகாரியமென்று
நமது நபிபெருமானார் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லமவர்கள்
திருவாய்மலர்ந்தருளியிருக்க, இவ்வரம்பை மீறி, கட்டவிழ்த்த கழுதைகள்
போல் எங்கும் அந்தத் தர்காக்களி லுலாவித் திரிகின்றனர். இப்பேதமைக்
குணமுள்ள கோதையர்கள் செய்யும் செய்கைகளை என் கனவிலும் கண்டதே

யில்லை. கர்மப்பேய் பிடித்துக் கதறியழும் கன்னியர்களின் கூக்குரல்களைக் கண்டவர் பதறித் திகைப்புற்று நிற்க நேரிடுகிறது. பேய்பிடித்தவர்களாலும், பிசாசுபிடித்தவர்களாலும், ஷைத்தான் பிடித்தவர்களாலும், சனியன் பிடித்தவர்களாலும் இடப்படும் கூக்குரல்களையும் அவஸ்தைகளையும் ஜனங்கள் கேட்டு ஆச்சரியமான ஓர் காட்சியென்று கருதி அசைவற்று ஆங்கே நெடுமரம்போல் நிலைநின்றுவிடுகிறார்கள்.

சில பெண்டிர்கள் தத்தம் குழந்தைகளைச் சமாதியின் முன்னிலையில் உருட்டுவதும், மற்றுஞ் சில கோதையர்கள் சமாதியின் தலைப்பக்கங்களில் வைத்திருக்கும் எண்ணெய்களைத் தொட்டுத் தொட்டுத்தலையிலும் கையிலும், புண்ணிலும், பொடுகிலும்தேய்க்கிறதும். இன்னுஞ்சிலகன்னியர்கள்குழந்தைகளைக் கிடத்தி ஒருருவமும் வெளிக்குத் தெரியாமல் வெள்ளைத் துணியை அக்குழந்தை மேல் போர்த்தித் தலையிலிருந்து கால்வரை துட்டுகளையடுக்கி அத்துட்டுகளை அச்சமாதிகளுக்குக் காணிக்கையாகக் கொடுக்கிறார்கள்; இன்னும் பல பாவையர்கள் சமாதியின் மேல் போர்த்தியிருந்த பழைய பச்சைப் போர்வைகளைக் கிழித்துக் கிழித்துக் கைகளிலும், கழுத்திலும் கட்டிக்கொள்கிறார்கள். (இதேமாதிரி பச்சைப் போர்வை போன்ற துணிகளைப் பக்கீர்கள் கொடுத்து ஏமாற்றிப் பணம் பறிக்கிறார்கள்; இதைப்பற்றிக் கேள்வியும் பட்டிருக்கிறேன்; சில ஊர்களில் கண்ணாலும் பார்த்திருக்கிறேன்.) சில ஆடவர்கள் தலையில் செம்பு வைத்து ஆனந்தக் கூத்தாடுவதும், நெளிந்து வளைந்து, துள்ளித் துடிப்பதும் பெரும் வேடிக்கைகளாக இருக்கின்றன; பக்கீர்களும், மிஸ்கீன்களும் கூர்மையான கத்திகளையும் கம்பிகளையும்யெடுத்துக்கொண்டு தலையுச்சியிலும் வயிற்றிலும் நாக்கிலும் கண்ணிலும் கன்னத்திலும் குத்துவதைப்பார்த்தால் உள்ளம் பதைபதைத்து மெய்ம்மறந்து நிற்கச்செய்திடக்கூடிய மகாமகா கொடிய அகங்காரச் செய்கைகளாகவே காணப்படுகின்றன. கையில் ஜெபமாலையைப்பிடித்து வாயை முணுமுணுவென் றசைத்துக் காசுகள்பிடுங்கும் கள்ள ஞானிகள் வேஷம் பூண்டு நுஜூம் சொல்வதும், இந்திரஜால மந்திரஜாலக்காரர்கள் மாயவித்தையென்றும் காயவித்தை யென்றும், கண்கட்டு வித்தைகளென்றும் காலத்திற்கேற்ற கோலஞ்செய்து காசு பறிப்பவர்களாக எங்கும் கூக்குரலிட்டுத் திரிகிறார்கள். தம்படி வாலாக்கள் கஞ்சாவைக்கசக்கி இழுத்துவிடும் புகைகள் காரிருள்போல் ஆங்காங்கு கம்மிக்கொண்டிருக்கும். சாரந்தா, பிடில், தப்லாவுடன் ஹார்மோனியம், வீணையும் மீட்டிக் கஞ்சின்கள் சதுர்க்கள்ஆடும் பெண்டிர்கள் ஆட்டமுமே அங்கே எண்டிசையிலும் முழங்குகின்றது. வேசையர் வேஷப்பகட்டும் காமத்துஷ்டர்களாசைத்துறட்டும் இன்னும் இப்படிப்பட்ட ஆபாச அருவருப்புக்களும் நிகழ்கின்றன. திருடர்கள், சிறுவர்கள் சிறுமிகளுடைய கைகளிலும், கழுத்துக்களிலுமுள்ள, ஆபரணங்களை யபகரித்தலும், சிறுவர்கள் கதறித் துடித்தலும் பரிதாபத்திலும் பெரும் பரிதாபமாயிருக்கின்றன. குடியர்கள் மதுபானங்களைச் செய்துவிட்டு மானபங்கமான அட்டூழியங்களைச் செய்கிறார்கள். கடைகளையும் மற்றுமுண்டான ஹோட்டல்களையும் பலாத்காரமாய்க் கொள்ளையிடுகிறார்கள். இன்னுமநேக

அக்கிரமங்களைச் செய்கிறார்கள்! இவர்களைக் கண்டிப்பதற்கும் தண்டிப்பதற்கும் எவரும் முன்வருவதில்லை; இவர்களுடைய ஜோக்கே பெருஞ்ஜோக்காகவிருக்கிறது. (இவ்விதப் பாதகங்கள் எச்சாதியினர் சமாதிகளிலும் நடைபெறத்தான் செய்கின்றன.) விபசாரிகள் குடிசைகளில் நடக்கும் அக்கிரமங்களை வாய்கொண்டளக்க முடியாது; இத்துஷ்டைகள் எக்கோயில்களிலும், தர்காக்களிலும் பசுபதிபோல் பசப்பிப் பாசாங்கு செய்து பின்பு தத்தம் மாயவலைகளை வீசி விடுகிறார்கள்.

இன்னும், வஞ்சகமாய்ப் பொருள்பறிக்கும் பஞ்சபாதகச் சூதாட்டக் கடைக்காரர்கள் கொள்ளையே கொள்ளை! பொருளாசைப் பித்துப்பிடித்த பேதையர்கள் இப்பஞ்சபாதகத் தொழிலில் புகுந்து பொருள்யாவும் பறிகொடுத்துவிட்டு வழிச்செலவுக்குப் பணமில்லாமல் புலம்பியழுது கொண்டு திரிகிறார்கள். இவ்வித அதிக்கிரமங்களாலும், அட்டூழியங்களாலுமே அச்சமாதி சூழப்பட்டிருக்கிறது; இவ்வதிக்கிரமங்களும் ஆபாஸங்களும் என்றைக்குத் தொலையுமோ! ஓ ஆண்டவனே! உன்னால் தானே முடியும்; வேறு யாரால்முடியும்? இவைகளை வேரோடறுக்கக் கூடிய படிப்பினையை, ஒரே வெள்ளமாயும் பூகம்பமாயும் ஏற்படுத்தியும் இன்னும் பயம் ஒருவருக்கேனும் வரவில்லையே! சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடக்கப் பகுத்தறிவும் கிடைத்திருக்கிறதே! இது கிடைத்தும் பயனில்லையே! அவன்தான் என்செய்வான்; இனிமேலாவது நடப்பார்களா? அதுவும் என்றையோ? இன்றையோ! அல்லது நாளையோ!

ம. கா. மு. முகம்மது இபுறகீம்
இரங்கூன்

[நாம் கேட்டுவிடுத்திருந்த சன்மான வியாஸ வினாவுக்கு இவர் ஒருவரே விடையிறுத்திருக்கிறார். ஏனையோர் இவ்விஷயத்தில் பிரயத்தனப்படாததிலிருந்து அவர்கள் இஸ்லாமிய சீர்திருத்தத்தில் எவ்வளவு அசிரத்தையுள்ளவர்களா யிருக்கிறார்களென்று தெரிந்து கொள்ளுகிறோம். இஸ்லாம் எக்கேடு கெட்டால் எனக்கென்ன? என் சுயநலக்காரியமே எனக்குப்போதுமானதா யிருக்கிறது என்பதுதான் இவ்வுலகில் பெரும்பான்மையோரின் நிரந்தரமான கொள்கையா யிருக்கிறது. ப-ர்.]

உயிருக்குயிர்

“தாருல் இஸ்லாம்” பத்திரிகை யாசிரியரவர்கள் திருச் சமுகத்திற்கு: மரியாதைக்குரிய, பாயீ!

யானொரு மிகக் குறைவாகக் கற்ற தமிழன்; இதன் பலனாக எனக்கேற்படும் சந்தேகங்களோ மிகப் பல; அதிகம் அறியவேண்டுமெனும் ஆவலோ அளவு கடந்தது.

யான் முன்னொரு முறை தங்கள் பத்திரிகை வாயிலாக, மதவிஷயத்தில் சற்றேறக்குறைய முற்றிலும் மௌட்டீகனாயிருந்த என்னை, "தாருல் இஸ்லாம்" உள் இருளைக் கொஞ்சங் கொஞ்சமாய் நீக்கி ஒரு தைரியசாலியாகவும், புத்துயிர் பெற்றவனாகவும் செய்துவருகின்றது என்று உள்ளம் ஒடுங்கப்பலரறிய ஒப்புக்கொண்டிருக்கின்றேன்.*

தாங்கள் "தாருல் இஸ்லாத்" தின் சந்தாத்தொகையை உயர்த்தவேண்டி, சந்தாதாரர்களின் அனுமதியைக் கேட்டிருந்தீர்கள். நானென் முழு மனத்துடன் உயர்த்துவதே நன்மை பயக்குமென்று பதிலளித்திருந்தேன். அதன் பிறகு அதன் பிரஸ்தாபமே இல்லை. ஏனோ? திருப்தியான அனுமதி சந்தாதாரர்கள் கொடுத்தருளினார்களில்லைபோலும். அப்படியாயின் அது என் துரதிருஷ்டவசமே. "என் துரதிருஷ்ட வசமே" என்றேன்; ஏனெனின், நானென்ன யோசித்திருந்தேனென்றால், சந்தாத்தொகையை உயர்த்தச் செய்து அதன்பிறகு பத்திரிகாசிரியரை ஒரு வேண்டுகோளுக் கிடங்கொடுக்கும்படி செய்யலாமென்று கருதியிருந்தேன். அதாவது இப்பொழுது "தாருல் இஸ்லாத்" தில் வெளிவரும் விஷயங்களோ "கண்மணி" யைவிட மேலானதாக இருக்கின்றன. "உயிருக்குயிர்" கொடுப்பது "தாருல் இஸ்லா" மென்று சொல்லின் மிகையாகாது. ஏனெனின் மௌட்டீகத்தில் ஆழ்ந்து கிடந்த எம்போன்ற முஸல்மான்கள் மிகப்பலரைக் கண் திறந்து பார்க்கச் செய்தது. அதோடு நில்லாது தூக்கத்திலிருந்து சடேரென்று விழித்தோன் மிரட்சியடைவது சகஜம். அம் மிரட்சியால் பரபரவென்று கால்டிகளையெடுத்துவைத்துப் பக்கத்திலிருக்கும் தட்டுமுட்டுச் சாமான்களின்மீது விழுந்து தன்னையும், சாமான்களையும் கஷ்டத்திற்கும் நஷ்டத்திற்கும் உள்ளாக்கிக் கொள்வான். அல்லது இடிக்கக்கூடாத சுவரில் இடித்துக் கொண்டு வருந்துவான்; பிறகுதான் நிதானப்படுவான். "தாருல் இஸ்லாம்" தூங்கினவர்களை விழிக்கச்செய்ததோடு விட்டுவிடாமல் ஆய்ந்தோய்ந்து ஆராய்ந்து புத்திக்கும் யுக்திக்கும் பொருந்துவனவாகிய நீதிகளாகிய தண்ணீரை முகத்தில் தெளித்து நிதானம் பெறும்படிசெய்து, நன்மை இது, தீமை இது என்று ஸ்பஷ்டமாக விளங்கும்படியான பாதைகளைச் செவ்வனே திறந்துவைத்து நன்மையைப் பயக்கும் பாதைவழியே போகும்படி தூண்டும்படியான ஒரு புத்துயிரை உண்டாக்கி அதன்வழியே செல்லச் செய்துவருகின்றது. ஆனால் அப்படிச் செல்லுங்காலோ அல்லது செல்லத் தயாராகிக்கொண்டிருக்கும்பொழுதோ—மௌட்டீக மென்னும் தூக்கத்திலிருந்து விழித்தவனுக்குச் சகஜமாகப் பல சந்தேகங்களும் அச்சங்களும் அடிக்கடி உண்டாய்த் தடைகள் பல நேரிடுவதுபோல் சந்தேகமுண்டானால் அதை அவன் நிவர்த்திசெய்துகொள்ள, "தாருல் இஸ்லா" த்தில் பக்கங்கள் மிகக் குறைவென்று சொன்னால் அது பிசகாகாதென்றே நம்புகின்றேன். மிகக் குறைவே. இதை நிரூபிக்கப் பின்னே தனியாகச் சில நடப்புக்களை எடுத்துக்காட்டுகின்றேன். ஆனால் அது யாருடைய பிசகு? பத்திராசிரியருடைய அல்லது அவர்கட்கு உதவிபுரிபவர்களுடைய பிசகெனின் பாபமாகும். ஆனால் யாருடையது? "நம்முடையது—சந்தாதாரர்களுடையது" என்று பின் வாங்காது ஒப்புக்கொள்ளுகின்றேன். இதைச் சந்தாதாரர்களாகிய மற்றைச் சகோதரர்களும் ஒப்புக் கொள்வார்கள்; ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். "இப்படிச் சொல்வது எப்படி நியாயமாகும்?" என்று ஒரு சந்தாதாரர் கோபிப்பரேல் பதில்கூற இடந்தருக. "உயிருக்குயிரை" நமது 'தாருல் இஸ்லாம்' கொடுத்துவருகின்றது என்று நான் சொன்னால் எந்தச் சகோதரரும் மறுக்கமாட்டாரென்று நான் திண்ணமாய் நம்புகின்றேன்.

* இவ் வியாசம் மறு சஞ்சிகையில் வெளிவரும். ப-ர்.

நம்முள் சுயநலங் கருதும் புரோகிதர்களும், பிராமணர்கள் வன்ற நடை உடை பாவனைகளால் மட்டும் உலகிற்குக்காட்டி நம்மை மௌட்டீகத்திலிருந்து விழியாமல் செய்திருந்த...பல பட்டங்கள் தரித்து உன்னத வாழ்வு வாழ்ந்துவந்த பெரியார்களும் தங்கள் மகிமை "தாருல் இஸ்லா" த்தால் இறக்கப்பட்டு விடுமென வஞ்சி அதன் பயனாகப் பொறாமை மேலிட்டு, "தாருல்இஸ்லாத்தைத்" தம் எதிரிபோல் கருதி அதையும், அதற்குக் காரணமாகிய அதன் ஆசிரியர் அவர்களையும் நசுக்க மிகப்பல பாடுகளும் சூழ்ச்சிகளும் செய்துவருகின்றனர் என்பதைச் சந்தாதாரச் சகோதரர்கள் எல்லோரும் அறிந்திருக்கிறார்கள்.

எதிர் மதவாதிகள் இஸ்லாத்தையே விழுங்கிப் பருகவேண்டுமென்ற பேராவல் கொண்டு அவர்கள் செய்யும் ஈன ஏற்பாடுகளை யறியாதார் யார்தான் உளர்? அப்படிப்பட்ட உலகத்தையே ஆட்டிவைக்கக்கூடிய இராக்கதர்களையும் ஒருபொருட்டாகக் கருதாமல் திறந்த மார்புடன் எதிர்த்து நிற்கும் "தாருல் இஸ்லா" த்தையும் அதன் மூலகர்த்தாவையும் விழுங்க என்ன என்ன படுகுழிகள் வெட்டி வருகின்றார்கள் என்பதை அறியாத சந்தா நேயர்களிரார்.

உலகத்தில், முக்கியமாய் நம் நாட்டில் சாமான்களின் விலை தினே தினேமிரளும்படி உயர்ந்துவருவதை அறிந்திராத மனுஷ்யரும் ஒருவருமிரார். இக் கிராமத்திலும் சுற்றுப்பக்கக் கிராமங்களிலும் பார்க்க வாந்தியெடுக்க வருகிறாற்போன்ற அரிசி ரூபாய்க்கு இரண்டு படிகள்தாம்; அதுவும் கிடைப்பது அரிதாக இருக்கின்றது. இப்பொழுது இரண்டு நாளைக்கு ஒருவேளையாவது வயிறாரச்சாப்பிடாத மிகப் பலரைக் கண்கூடாய்க் காணலாம். ஓ வல்லாம் வல்லோனே, இதுவும் உன் திருவிளையாடலோ?

இன்னும் பல காரணங்களை எடுத்துக்கூற இடமுண்டு. ஆனால் "தாருல் இஸ்லா" த்தில் இடம் குறைவே என்ற பயமேலீட்டால் விவரிக்காது விட்டேன்—ஒன்று முக்கியமானது; அதைச் சொல்லிவிட இடமளிக்க.

இஸ்லாமதம் இரத்தப் பிரியமுள்ள மிலேச்சர்கள் கைக்கொண்ட ஓர் மதம்பிடித்த மதமென்று நம் நாட்டுப் புறமதச் சகோதரர்களும் மற்றவர்களும் அறியாமையால் கருதி இகழ்ந்துவந்தனர்; வருகின்றனர். இதற்கு அத்தாட்சியாகச் சமீபத்தில் ஓர் ஆங்கில மஹான் கூறியுள்ளதை (முஸல்மான் சகோதரர்களே!) கவனியுங்கள். இம் மஹான் கல்வி கேள்விகளில் பயிற்சி பெற்றவர்; நிபுணராம். இவர் பலநிபுணர்கள் கூடிய ஒரு மஹாநாட்டில்,

ஒரு சிறப்புவிழாக் கூட்டத்தில்(அதிகப்)பிரசங்கம் அறியாமையாலும், மௌட்டீகத்தாலும் செய்திருக்கின்றார். ‘ஹிந்துமதம்’ ‘புத்தமதம்’ முதலிய மதங்களையெல்லாம் ஏசிவிட்டு அடியிற்கண்டவாறு பேசினார்:

“மகம்மது என்ன கற்பித்தான்? அரிய நேசர்களே! நான் இஸ்லாத்தை நினைக்கும் பொழுதெல்லாம் ஆவேசம் கொள்ளாமல் பேசச் சாத்தியப்படவில்லை...இல்லை. மகம்மது கடவுளைப்பற்றி நமக்கொன்றும் கற்பிக்கவில்லை—அவனுடைய அல்லா(ஹ்)ஒரு கொடூர ராக்ஷஸன். அவன்சுவர்க்கமோ அல்லது மறுவுலகமோ சொல்லொண்ணாதபடி ஆபாஸமானது.” (இவர்தாம் சமாதானமும், சாந்தமும், பொறுமையும் உருவமேயாக வந்த இயேசு தீர்க்கதரிசியைப் பின்பற்றியவர். இவர்தாம் மற்ற “அஞ்ஞானிகளை” இயேசுவின் பாதத்திற்கு இட்டுச்செல்லும் பாதிரியார். என்ன பேதைமை; அந்தோ! ஓ தீனதயாளுவே! இவர் அறியாமையால் கூறும் கூற்றுக்களுக்காக இவரை மன்னித்தருள்க.)

இவர் கூற்றைப்பற்றி ஒன்றும் சொல்லத் தேவையில்லை. ஆனால் சகோதரர்களே! இதிலிருந்து இஸ்லாத்தைப்பற்றி அயலார் என்ன அபிப்பிராயம் கொண்டுள்ளார் என்று தெரிந்துகொள்ளவில்லையா?

இவர்போன்ற மூடர்களையும் மற்றுமுள்ள நம்போன்றவர்களையும் கண்விழிக்கச் செய்ய என் பாடு படுகின்றது “தாருல் இஸ்லாம்”—என்பதைச் சொல்லத் தேவையா? இவ்வளவு அரியபெரிய ‘உயிருக்குயிர்’ கொடுக்கும் “தாருல் இஸ்லாத்”திற்கு நாம் கொடுத்துவரும் சந்தாத் தொகையாகிய ரூபாய் 3 அற்பமும் சொற்பமும் அல்லவா? மிகப் பாடுபட்டுத் தன்னலங் கருதாது பிச்சையெடுத்தேனும் அல்லா(ஹ்) வின் வழியே நம் மெல்லோரையும் கொண்டுசெலுத்த அப்பெரியாராகிய தாவுத்ஷா சாஹிபவர்கள் (அலலாஹ் அவருக்குத் தீர்க்காயுளும் நன்மாராயமும் தைரியமும் விடாமுயற்சியும் கொடுத்து உதவி புரிவானாக) கங்கணங் கட்டிக்கொண்டு படாத பாடுபட்டுழைக்கின்றாரென்பதில் யாருக்கும் சந்தேகமுண்டோ? இல்லை. அவர்பத்திரிகையின் பக்கங்களை அதிகப்படுத்தி அதிக சமாசாரங்களை நம் நன்மைக்காக வெளிப்படுத்த முடியாமலிருக்கும்போது நம் சந்தேகங்களை நாமிஷ்டப்படும் பொழுதெல்லாம் பத்திரிகை வாயிலாக அவர் வெளியிடவில்லையென்றால் அது நம்முடைய பிசகென்று ஒப்புக்கொள்ளுவதுதானே நியாயம்? அவர் சாத்தியமானவரை பிச்சையெடுக்கத்தான் செய்கின்றார்; பலனடையும் நாம் “உயிருக்குயிர்” கொடுக்கும் “தாருல் இஸ்லா” த்திற்கு வருடமொன்றுக்குக் குறைந்தது ரூபாய் 5 கொடுக்கக்கூடாதா? அதிகம் சொல்லத்தேவையில்லை. சகோதரர்களே! உங்கள் அனுவசியச்செலவை(பீடி, சுருட்டு, சிகெரெட்டுப்பிடித்தலைக் கொஞ்சம் குறைத்தாலுமாயிற்று; அல்லது ட்ராமா, சினிமாக்களுக்குப் போவதை ஒன்றிரண்டு இரவுகளுக்குப்போகாமல் நிறுத்திக்கொண்டாலுமாயிற்று) கொஞ்சம் குறைத்தால் போதுமானது.

* * * * *

ஆசிரியரவர்களே! தாங்கள் பத்திரிகை மூலமாக மறுபடியும் பழய கேள்வியைக் கேட்டு அடுத்த ஆண்டிலிருந்து சந்தா ரூபாவைக் குறைந்தது

ஐந்தாக ஏற்படுத்துவீர்களானால் நன்மையடையும் பகுத்தறிவுள்ள எந்தச் சகோதரரும் பின்னிடையமாட்டார் என்று நான் திண்ணமாய்க் கூறுவேன்.

அப்படி ரூபா 5 சந்தா அடுத்த ஆண்டிற்கு ஏற்படுத்தியாகிவிட்டது என்று கருதி அடியிற்கண்டபடி வேண்டிக்கொள்ளுகின்றேன்.

நான் சில சந்தாதாரர்களை என் பங்கிற்காக ஸிபாரிஷ் செய்துள்ளேன். அவர்கள் “தாருல் இஸ்லா”த்தால் அடையும் பேரானந்தத்திற்கு அளவே இல்லை. ஆனால் அவர்கள் அடையும் சந்தேகங்களைத் தாங்கள் நிவர்த்திப்பீர்களோ? அப்படிச்செய்ய, “தாருல் இஸ்லா”த்தில் பக்கங்கள் போதாவே! என்று வருந்துகின்றார்கள்; என்னை எழுதும்படி ஏவுகின்றார்கள். எனக்குப் பூரணமாய்த் தெரியும் “தாருல் இஸ்லா”த்தில் இடங் கிடையாது என்று. ஆனதால் நான் அவர்களைச் சந்தோஷப்படுத்த ஹேதுவில்லாது போகின்றது. அதனால் அதிருப்தியும் ஸகஜமாக ஏற்படுகின்றது. அதுபற்றி நான் மிக ஊக்கத்துடன் வேண்டிக்கொள்கின்றேன்—“தாருல் இஸ்லா”த்தில் தாராளமாய் இடம் கொடுக்க.

இரண்டாவது என்னுடைய சொந்த அபேக்ஷையாவது: நான் ‘தாருல் இஸ்லாய்’ பெறும் 2-ந்தேதியன்றே அல்லது அடுத்த தேதிக்குள் அதிக ஆவலுடனும் ஊக்கத்துடனும் படித்து முடித்துவிடுகின்றேன். முடிந்தவுடன் “அதன் தொடர்ச்சியைப்பார்க்க இன்னமும் ஒருமாதம் செல்லுமே” என்று ஏங்கிவிடுகின்றேன். மறுபடியும் படித்ததையே படிக்கின்றேன். “தொடர்ந்து படிக்க இல்லையே” என்று ஏமாற்றமடைகின்றேன். ஆதலால் குறைந்தது மாதமிருமுறையாக, “தாருல் இஸ்லாம்” உலாவும்படி செய்ய இயலாதா? தாங்கள் பிரயத்தனப்பட்டால் அல்லா(ஹ்)வும் தயாளுக்களும் சாந்தாதாரர்களும் உதவார்களா? எதிர்பாராதவிதமாய்க் :குர்ஆன் ஷரீ‘பைச் செந்தமிழில் வியாக்கியான வெள்ளத்துடன் நல்லோர் கையிலும் புல்லோர் கையிலும் கொடுக்கும்படி தங்களுக்குத் தைரியத்தை யருளிய அவ் வாண்டவன் “தாருல் இஸ்லாத்தை” மாதமிருமுறையாவது எல்லோருடைய கையிலும் இருக்கும்படி செய்ய மாட்டானோ? மனமுண்டேல் இடமுண்டு. அல்லா(ஹ்) ஆக்குவோன், காப்போன், அளிப்போன். அவனையே வேண்டுகின்றேன். சந்தாதாரச் சகோதரர்களே! முஸல்மான்களே நன்றிமறவாதீர்கள். நாளை ஜவாப் சொல்லவேண்டும். இங்ஙனம்: துலாம்.

[குறிப்பு:—அடுத்த ஜனவரிமாதம் சந்தாவை உயர்த்த உத்தேசமில்லை. இப்பொழுதுள்ள சந்தாவுக்கே இப்பொழுதுள்ள 48 பக்கங்களிலேயே இன்னும் அதிகமான விஷயங்களைப் புகுத்த ஏற்பாடு செய்து வருகிறோம். ஆயினும் அதிலும் வினா விடைகளுக்கு இடமிராதென்று அஞ்சுகிறோம். :குர்ஆன் மொழிபெயர்ப்பு வேலையுடன் மாதம் இருமுறையாக இச்சஞ்சிகையை வெளியிடுவதும் முடியாத காரியமாய்க் காணப்படுகின்றது. மேலும் இப் பத்திரிகையானது வருடமொன்றுக்கு எம்மால் சகிக்க முடியாத அவ்வளவு நஷ்டத்துடனேதான் மிகப்பிரயாசையுடன் மாதமொருமுறை வெளியிடப்பட்டுவருகிறது. ஆனால் ரூ. 5 சந்தாவில் 2000 நண்பர்கள் சேரக்கூடுமாயின் இப் பத்திரிகையையே 80 பக்கங்களுடன் ஒவ்வொரு

மாதலும் மிக நன்முக வெளியிட முன்வரலாம். நாஸ்திகமும் லோகாயதமும் மிக்குப்பெருகி மிகு புனல்போல் இவ்வுலகத்தையே மூழ்கச் செய்துவரும் இக்காலத்தில் முஸ்லிம்களும் தங்களுடைய மதவிஷயத்தில் பராமுகர்களாயிருந்துவருவது மிகக் கொடிய காலத்தின் ஒரு பெரிய அடையாளமாகவேயிருந்துவருகிறது. இம் முஸ்லிம்களுக்குத் தங்களுடைய மதத்திலும் வேதத்திலும் உண்மையான பற்றுண்டாயிருக்குமாயின் இவர்கள் இக்காலத்தில் தங்களுடைய ஆட்சியிலும் அதிகாரத்திலும், செல்வத்திலும் செல்வாக்கிலும், நாகரிகத்திலும் நல்லொழுக்கத்திலும் இத்துணைப்பாதாளத்துள் வீழ்ந்திருக்க மாட்டார்கள் என்பதே திண்ணம். ப-ர்.]

நான் ஏன் முஸ்லிம் ஆனேன் ?

(முன் 499-ம் பக்கத்தொடர்)

[முஹம்மத் ஸிராஜுல் இஸ்லாம் என்னும் தாஸ்தப்தா]

நான், மனிதனுடைய பக்திக்கும் யுக்திக்கும் பொருத்தமான ஒரு மார்க்கத்தைக் கண்டுபிடிக்க ஆராய்ந்தபோது எனக்கு மூன்று விதமான புஸ்தகசாலையார் உதவி புரிந்தார்கள். ஒவ்வொரு புஸ்தகசாலையிலும் நான் நான்கு அல்லது ஆறு மணிநேரம் ஒருதினத்தில் வாசிக்கவும் சௌகரியம் வாய்ந்தது. நான் முதலில் ஹிந்து மதத்தைப்பற்றியே ஆராய ஆரம்பித்தேன். தீவிரஹிந்துக்களே அம்மதத்தில் அனேகங் குறைகளிருக்கின்றனவென்று ஒப்புக்கொள்வார்கள். அது மற்ற மதங்களினின்றும் தனிப்பட்டதாயிருக்கிறது; ஜாதி வித்தியாசம்போன்ற பல, தகாத கொள்கைகளைக்கொண்டிருக்கின்றது. மனுசாஸ்திரம் போன்ற பலஜாதிவித்தியாகக் கொள்கைக்காரர்கள் அம்மதத்தை ஒரு சிரிக்கத்தக்க வஸ்துவாகச் செய்துவிட்டார்கள். இக் காரணத்திஞல்தான் முஸ்லிம் அரசர்கள் ஆண்டகாலத்தில் தோன்றிய எல்லா விதமான சீர்திருத்தக்காரர்களும், பலவிதமான மதக்கொள்கைகளையும் வெறுப்புள்ள ஹிந்துக்களுக்குச்சமத்துவம் முதலியவற்றிற்காகப் போதித்து வந்தார்கள். குரு நானக்,கபீர் முதலிய பெரியோர்கள் இஸ்லாத்தைப் புகழ்ந்திருக்கிருர்கள். தக்ஷிண இந்தியா முகலாய ராஜ்யத்துக்குத் தூரத்தில் இருந்ததால் வட இந்தியாவில் ஜாதிபேதம் ஒழிந்துவரும் இக்காலத்திலும் தென்னிந்தியாவில் அவ் வித்தியாசம் அதிகமாகக் காணப்படுகிறது. அனேகம் பிரபலமான ஹிந்துக்கள்–காந்தியைப்போன்ற மகாத்மா உள்பட—தற்போது ஜாதிபேதம் ஒழியவே மன்ருடி வருகிருர்கள். உண்மையில் ஹிந்து மதத்தில் மனிதனுடைய மனதைக் கவரக்கூடிய கொள்கை ஒன்றும் கிடையாது. சாம வேதத்திலும் ருக்வேதத்திலும் ஸோமாஸத்தைப் பற்றியே அதிகமாகச்

சொல்லப்பட்டிருக்கிறது.அதர்வண வேதத்திலோஎப்படிப் பெண்களை ஆசை காட்டி இழுப்பது? ஓர் எதிரியை எப்படி நோய்வாய்ப்படும்படி செய்வது? எப்படி நம்முடைய விரோதியைச் சூழ்ச்சியினுல் வெல்லுவது? போன்ற பல வஞ்சனையான போதனைகள் சொல்லப்பட் டிருக்கின்றன. எல்லா வேதங்களையும் ஆராய்ச்சிசெய்தபோதிலும் ஹிந்து மார்க்கத்தின் உயர்ந்த எண்ணங்களும் சிறந்த கொள்கைகளும் காணப்படுகின்றனவேயன்றி ஒரு வரையறுக்கப்பட்ட ஸ்திரமான ஒரு மதத்தை அவை போதிப்பதில்லை. உலகத்தில் இதர தேசங்களெல்லாம் அஞ்ஞானத்தில் மூழ்கியிருந்தபோது ஹிந்து வேதக்காரர்கள் ஒரு கடவுளையும், ஆத்மாவின் அழிதியையும் கண்டுபிடித்தார்கள். வேதங்களைக் கூர்மையாய் வாசித்தவர்கள், அதில் வெவ்வேறு விதமான இயற்கைகளையும், வெவ்வேறு விதமான மானஸ ஆண், பெண் தெய்வங்களையும் பார்த்து அவை சொல்லப்பட்டிருப்பதை அறிவார்கள். ஆனுல் வேதங்களில் மதம் என்னும் ஒன்றைக் காணமுடியவில்லை.

எல்லாம் வல்ல ஆண்டவனுடைய ஸ்தானத்தைப் பல மானஸ தெய்வங்கள் கைப்பற்றிக்கொண்டிருக்கின்றன. நான் வேதத்தையும், பைபிள், குர்ஆன்களையும் ஒத்திட்டுப்பார்த்ததில் எனக்கும் இமயகிரிக்குமுள்ள வித்தியாசங்கள் காணப்படுகின்றன. எவ்வாருயினும் வேதங்கள், தேசத்திலே அனுஷ்டிக்கமுடியாமல் எண்ணத்தில் மாத்திரம் கொள்ளக்கூடிய அனேக விதமான தத்துவங்களையும், சாஸ்திரங்களையும், இலக்கணங்களையும், அகராதிகளையும், தர்க்க முறைகளையும் வெளிப்படுத்தி யிருக்கின்றன. ஒவ்[illegible]வாரு புஸ்தகத்தையும் சிலாகிக்கக்கூடியவர்கள் அனேகம் பேர்களிருந்தா[illegible]ம் அவைகளுள் மதம் இன்னதென்பதைக் காண இயலவில்லை. சந்தேகமின்றி அனேகம் புஸ்தகங்கள் நற்குணங்களையும் இதர நீதிகளையும் போதிக்கின்றனவாயினும் மதவிஷயமாகப் பார்க்கும்போது அவற்றில் ஒன்றுமில்லை. ஹிந்து மதத்தைப் புகழ்கிறவர்கள் அப்படிச் செய்வதற்குக் காரணம் அந்த மதம் அவர்களுடையதா யிருப்பதும், அந்த மதத்தைப்பற்றிய பக்ஷபாதமற்ற ஆராய்ச்சி இல்லாததுமேயாகும். அதேசமயத்தில் முஸ்லிம்களுள் [illegible]ப்பேரில் ஒருவர் தவிர மற்ற ஒன்பதுபேர்களும் தங்களுடைய [illegible]தைப்பற்றித் தெரிந்துகொண்டிருப்பதன்றிக் குர்ஆனையும் மனனம் [illegible]திருக்கிருர்கள். ஹிந்துக்களுள் ஆயிரத்தில் ஒருவராவது வேதத்தைப் பட[illegible]த்திருக்கிருரா? அல்லது ஒன்று அல்லது இரண்டு சுலோகங்களையேனும் அவ[illegible]றினின்றும் மேற்கோளாக எடுத்துக்காட்ட யோக்கியதையுள்ளவர்களாயிருக்கிருர்களா?என்பதுதான்கேள்வி. உபநிஷத்துக்களிலுங்கூட,பேகன் வியாசங்களைக்காட்டினும் சிறந்ததாக ஒன்றும் காணப்படவில்லை. ஹிந்துக்கள் மாத்திரமல்லி,பல பிரபலமான ஐரோப்பிய ஆராய்ச்சிக்காரர்களும் பகவத்கீதையை மிக சிலாக்கியமாகக் கொண்டாடுகிருர்கள். ஆனுல் ஹிந்துக்கள் அதை ஒரு வேத புத்தகமாகக் கொள்ளும்போது ஐரோப்பியர்கள் அதை மதசம்பந்தமில்லாத ஒரு பாசுரமாகக் கொள்ளுகிருர்கள். இது மகா பாரதத்திலுள்ள ஒரு சிறந்த அத்தியாயமா யிருப்பதுமன்றி ஒரு கற்பனையாகவும் தெரிகிறது. இதனுடைய ஆசிரியரும் தேதியும் விவரமாய்த் தெரியு

மாதலும் மிக நன்றாக வெளியிட முன்வரலாம். நாஸ்திகமும் லோகாயதமும்
மிக்குப்பெருகி மிகு புனல்போல் இவ்வுலகத்தையே மூழ்கச் செய்துவரும்
இக்காலத்தில் முஸ்லிம்களும் தங்களுடைய மதவிஷயத்தில் பராமுகர்களா
யிருந்துவருவது மிகக் கொடிய காலத்தின் ஒரு பெரிய அடையாளமாகவே
யிருந்துவருகிறது. இம் முஸ்லிம்களுக்குத் தங்களுடைய மதத்திலும் வேதத்
திலும் உண்மையான பற்றுண்டாயிருக்குமாயின் இவர்கள் இக்காலத்தில்
தங்களுடைய ஆட்சியிலும் அதிகாரத்திலும், செல்வத்திலும் செல்வாக்கிலும்,
நாகரிகத்திலும் நல்லொழுக்கத்திலும் இத்துணைப்பாதாளத்துள் வீழ்ந்திருக்க
மாட்டார்கள் என்பதே திண்ணம். ப-ர்.]

நான் ஏன் முஸ்லிம் ஆனேன்?

(முன் 499-ம் பக்கத்தொடர்)

[முஹம்மத் ஸிராஜுல் இஸ்லாம் என்னும் தாஸ்துப்தா]

நான், மனிதனுடைய பக்திக்கும் யுக்திக்கும் பொருத்தமான ஒரு
மார்க்கத்தைக் கண்டுபிடிக்க ஆராய்ந்தபோது எனக்கு மூன்று விதமான
புஸ்தகசாலையார் உதவி புரிந்தார்கள். ஒவ்வொரு புஸ்தகசாலையிலும் நான்
நான்கு அல்லது ஆறு மணிநேரம் ஒருதினத்தில் வாசிக்கவும் சௌகரியம்
வாய்ந்தது. நான் முதலில் ஹிந்து மதத்தைப்பற்றியே ஆராய ஆரம்பித்தேன்.
தீவிரஹிந்துக்களே அம்மதத்தில் அனேகங் குறைகளிருக்கின்றனவென்று
ஒப்புக்கொள்வார்கள். அது மற்ற மதங்களினின்றும் தனிப்பட்டதாயிருக்
கிறது; ஜாதி வித்தியாசம்போன்ற பல, தகாத கொள்கைகளைக்கொண்டிருக்
கின்றது. மனுசாஸ்திரம்போன்ற பலஜாதிவித்தியாகக் கொள்கைக்காரர்கள்
அம்மதத்தை ஒரு சிரிக்கத்தக்க வஸ்துவாகச் செய்துவிட்டார்கள். இக் கார
ணத்தினால்தான் முஸ்லிம் அரசர்கள் ஆண்டகாலத்தில் தோன்றிய எல்லா
விதமான சீர்திருத்தக்காரர்களும், பலவிதமான மதக்கொள்கைகளையும்
வெறுப்புள்ள ஹிந்துக்களுக்குச்சமத்துவம் முதலியவற்றிற்காகப் போதித்து
வந்தார்கள். குரு நானக்,கபீர் முதலிய பெரியோர்கள் இஸ்லாத்தைப் புகழ்ந்
திருக்கிறார்கள். தக்ஷிண இந்தியா முகலாய ராஜ்யத்துக்குத் தூரத்தில் இருந்
ததால் வட இந்தியாவில் ஜாதிபேதம் ஒழிந்துவரும் இக்காலத்திலும் தென்
னிந்தியாவில் அவ் வித்தியாசம் அதிகமாகக் காணப்படுகிறது. அனேகம் பிர
பலமான ஹிந்துக்கள்—காந்தியைப்போன்ற மகாத்மா உள்பட—தற்போது
ஜாதிபேதம் ஒழியவே மன்றாடி வருகிறார்கள். உண்மையில் ஹிந்து மதத்தில்
மனிதனுடைய மனதைக் கவரக்கூடிய கொள்கை ஒன்றும் கிடையாது.
சாம வேதத்திலும் ருக்வேதத்திலும் ஸோமரஸத்தைப் பற்றியே அதிகமாகச்

சொல்லப்பட்டிருக்கிறது.அதர்வண வேதத்திலோஎப்படிப் பெண்களை ஆசை
காட்டி இழுப்பது? ஓர் எதிரியை எப்படி நோய்வாய்ப்படும்படி செய்வது?
எப்படி நம்முடைய விரோதியைச் சூழ்ச்சியினால் வெல்லுவது? போன்ற பல
வஞ்சனையான போதனைகள் சொல்லப்பட் டிருக்கின்றன. எல்லா வேதங்
களையும் ஆராய்ச்சிசெய்தபோதிலும் ஹிந்து மார்க்கத்தின் உயர்ந்த எண்ணங்
களும் சிறந்த கொள்கைகளும் காணப்படுகின்றனவேயன்றி ஒரு வரை
யறுக்கப்பட்ட ஸ்திரமான ஒரு மதத்தை அவை போதிப்பதில்லை. உலகத்தில்
இதர தேசங்களெல்லாம் அஞ்ஞானத்தில் மூழ்கியிருந்தபோது ஹிந்து
வேதக்காரர்கள் ஒரு கடவுளையும், ஆத்மாவின் அழிவின்மையையும் கண்டுபிடித்
தார்கள். வேதங்களைக் கூர்மையாய் வாசித்தவர்கள், அதில் வெவ்வேறு
விதமான இயற்கைகளையும், வெவ்வேறு விதமான மானஸ ஆண், பெண்
தெய்வங்களையும் பார்த்து அவை சொல்லப்பட்டிருப்பதை அறிவார்கள்.
ஆனால் வேதங்களில் மதம் என்னும் ஒன்றைக் காணமுடியவில்லை.

எல்லாம் வல்ல ஆண்டவனுடைய ஸ்தானத்தைப் பல மானஸ தெய்வங்
கள் கைப்பற்றிக்கொண்டிருக்கின்றன. நான் வேதத்தையும், பைபிள், குர்
ஆன்களையும் ஒத்திட்டுப்பார்த்ததில் எனக்கும் இமயகிரிக்குமுள்ள வித்தி
யாசங்கள் காணப்படுகின்றன. எவ்வாறாயினும் வேதங்கள், தேசத்திலே
அனுஷ்டிக்கமுடியாமல் எண்ணத்தில் மாத்திரம் கொள்ளக்கூடிய அனேக
விதமான தத்துவங்களையும், சாஸ்திரங்களையும், இலக்கணங்களையும்,
அகராதிகளையும், தர்க்க முறைகளையும் வெளிப்படுத்தி யிருக்கின்றன. ஒவ்
வாரு புஸ்தகத்தையும் சிலாகிக்கக்கூடியவர்கள் அனேகம் பேர்க ளிருந்தா
ம் அவைகளுள் மதம் இன்னதென்பதைக் காண இயலவில்லை. சந்தேக
மின்றி அனேகம் புஸ்தகங்கள் நற்குணங்களையும் இதர நீதிகளையும் போதிக்
கின்றனவாயினும் மதவிஷயமாகப் பார்க்கும்போது அவற்றில் ஒன்றுமில்லை.
ஹிந்து மதத்தைப் புகழ்கிறவர்கள் அப்படிச் செய்வதற்குக் காரணம் அந்த
மதம் அவர்களுடையதா யிருப்பதும், அந்த மதத்தைப்பற்றிய பக்ஷபாத
மற்ற ஆராய்ச்சி இல்லாததுமேயாகும். அதேசமயத்தில் முஸ்லிம்களுள்
ப்பேரில் ஒருவர் தவிர மற்ற ஒன்பதுபேர்களும் தங்களுடைய
தைப்பற்றித் தெரிந்துகொண்டிருப்பதன்றிக் குர்ஆனையும் மனனம்
திருக்கிறார்கள். ஹிந்துக்களுள் ஆயிரத்தில் ஒருவராவது வேதத்தைப்
பத்திருக்கிறாரா? அல்லது ஒன்று அல்லது இரண்டு சுலோகங்களையேனும்
அவற்றினின்றும் மேற்கோளாக எடுத்துக்காட்ட யோக்கியதையுள்ளவர்க
ளாயிருக்கிறார்களா?என்பதுதான்கேள்வி. உபநிஷத்துக்களிலுங்கூட,பேகன்
வியாசங்களைக்காட்டினும் சிறந்ததாக ஒன்றும் காணப்படவில்லை. ஹிந்துக்
கள் மாத்திரமல்லீ,பல பிரபலமான ஐரோப்பிய ஆராய்ச்சிக்காரர்களும் பகவத்
கீதையை மிக சிலாக்கியமாகக் கொண்டாடுகிறார்கள். ஆனால் ஹிந்துக்கள்
அதை ஒரு வேத புத்தகமாகக் கொள்ளும்போது ஐரோப்பியர்கள் அதை
மதசம்பந்தமில்லாத ஒரு பாசுரமாகக் கொள்ளுகிறார்கள். இது மகா பாரதத்
திலுள்ள ஒரு சிறந்த அத்தியாயமா யிருப்பதுமன்றி ஒரு கற்பனையாகவும்
தெரிகிறது. இதனுடைய ஆசிரியரும் தேதியும் விவரமாய்த் தெரிய

வில்லை. எவ்வாருயினும் பகவத்கீதை மனிதனுடைய இயற்கைக்
குணத்தை மாற்றிப் பக்திமார்க்கத்தில் செலுத்துகிறது. ஆனுல் வம்ச பரம்
பரையாக எவர்கள் அதை நம்பிவருகிருர்களோ அவர்கள் மாத்திரம் அதைத்
தெய்விக வேதமென் றியம்பலாம். நான் அதைக் களங்கமற்ற நெஞ்சுடன்
படித்ததில் முதல் வாக்கியங்களே எனக்கு ஆச்சரியமாகத் தோன்றுகின்றன.
குருக்ஷேத்திரமானது ஒரு புண்ணிய இடமென்று கருதப்பட்டிருக்கிறது;
அதை அப்படி அழைப்பதற்குக் காரணம் இன்னதென்று எனக்கு விளங்க
வில்லை; அஃது எனக்கு ஒரு விடுகதைபோலவே தோன்றுகிறது. உலக
சம்பந்தமான சில உரிமைகளுக்காகப் போராடிய, பந்துக்களுள்ளேயே ஒரு
வரை ஒருவர் கொன்ற இடத்தை எப்படிப்புண்ணிய பூமியென்று கருதுவது?
இவ்வாருன யுத்தங்கள் தெய்விகமாயிருக்குமானுல் பின்னர் உலகத்தில் எது
தான் தெய்விகமற்றது? குருக்ஷேத்திரத்தைப்புண்ணியபூமியென்று சொல்லும்
போது ஏன் வாட்டர்லூ என்னும் போர்க்களத்தையும் புண்ணியநாடென்று
கருதலாகாது? முஸ்லிம்கள் எப்போதும் பானிப்பட்டை அவ்வாறு தெய்விக
மாகக் கொண்டதேயில்லை; ஆனுல் கர்பலாவை மாத்திரம் சில முஸ்லிம்கள்,
அங்கே மதசம்பந்தமான யுத்தம் நடந்ததாலும் அனேகம் சிறந்த முஸ்லிம்
கள் அவ்விடம் தங்கள் உயிர்களையும் தியாகம் செய்ததாலும், புண்ணிய ஸ்தல
மென்று கூறிவருவதில் புஷ்டியான அர்த்தமிருக்கிறது. ஆனுல் குருக்ஷேத்தி
ரத்தில் ஒரு புண்ணிய புருஷனுவது இறந்ததாகத் தெரியவில்லை. அந்தக்
கவியில் கூறப்பட்டிருக்கும் சிரேஷ்டபுருஷர்கள் எல்லாரும் தப்பிக்
கொண்டார்கள். பின்னர் எதற்காக அதைப் புண்ணியஸ்தலமென்று கூ
வேண்டும்? சில பண்டிதர்கள் அதைத் தர்மக்ஷேத்திரமென்று வியாக்யானஞ்
செய்வதற்குப் பல சூழ்ச்சிகளையெல்லாம் செய்தும் பலனடையாமல் அவஸ்
தைப்படுகிருர்கள். அவர்கள் சிரமத்தின்மீது கொண்டுவரும் பதில்களும்
குடிகாரர்களைத்தான் திருப்தி செய்யும். தற்காலம் அனுஷ்டானத்திலிருக்
கும் ஹிந்துமதம் பதினெண் புராணங்களுக்கும் மகாபாரதத்துக்கும் ஒத்த
வண்ணமாகவேயிருக்கிறது. புராணங்களெல்லாம் கர்ணபரம்பரையான
கதைகளாகவே யிருக்கின்றன. அவற்றில் ஆண் பெண் தெய்வங்க
சரித்திரங்களே அதிகமாகக் காணப்படுகின்றன. இவை கிரேக்கர்களு
கதைகளைக்காட்டினும் மிகக் கேவலமானவையாயும், சிறு பிள்ளைகளு கு
உபதேசிக்கக் கூடாதவையாயும், ஒழுக்கமற்ற தன்மையனவாயும் காண டு
கின்றன. மகாபாரதம் பெரிய சமுத்திரம்போல் அனேக ஒழுங்கும் ழங்
கற்றதும், சுத்தமும் சுத்தமற்றதுமான பல ஆண்பெண் உதாரணங்களை
யுடையதாய், ஒன்றுக்கொன்று முரண்பட்டதான சரித்திரங்களை வரையப்
பெற்றிருக்கின்றது. உண்மையாக இந்த ஐந்தாவது வேதத்தில் ஒன்றும்
விடாமல் எல்லாம் வரையப்பட்டிருக்கின்றன. ஆகையால் ஹிந்துமதம் என்
பது எங்கேயிருக்கிறது? அதை எந்தப்புஸ்தகத்தில்தான் காணலாம்?

தற்போது புண்ணியமான வாழ்க்கையிலே சன்னியாச வாழ்வுதான்
சிறந்ததென்று கூறும் பக்ஷத்தில் ஹிந்து சன்னியாசிகளையும் முஸ்லிம்
புண்ணியாத்மாக்களையும் ஒத்திட்டுப் பார்ப்போம். இப்படியே யான்

ஒப்பிட்டு நோக்கினேன். எனக்கு ஜனுப்காஜாமுஹம்மத் அதீகுல்லா ஸாஹிப்
அவர்களுடைய சிறந்த புஸ்தகசாலையில் இதற்கு வேண்டிய சாதனங்கள்
எனக்குக் கிடைத்தன. அதில் எனக்கு இரண்டு புஸ்தகங்கள் அகப்பட்டன:
(1) ஹிந்துக்களின் சாசத்தைப்பற்றிய நூல், வீ. ரீட் என்பவரால் எழுதப்
பட்டது. (2) இஸ்லாமார்க்கத்தின் புண்ணியாத்மாக்கள், எச். க்ளாட்'பீல்ட்
என்பவரால் எழுதப்பட்டது. இந்த இரண்டு புஸ்தகங்களையும் வாசித்ததில்
முதல் புஸ்தகம் எனக்குச் சந்தோஷத்தையும் சிரிப்பையும் தந்தது. ஆனுல்
இரண்டாவது புஸ்தகமோ சற்று நேரம் என்னைப் பிரமை யடையும்படி
செய்துவிட்டது. ஹிந்துக்களின் துறவறமானது உலக சம்பந்தத்துக்குப்
பயந்து தன்னையே தான் துன்பப்படுத்திக்கொள்ளும்படி செய்கிறது. ஆனுல்
முஸ்லிம் பெரியோர்களோ ஆண்டவனுடன் அன்பாய் நடந்துகொள்ள
முயற்சிக்கிருர்கள். டாக்டர் பாஸ்டஸ் என்பவர் ரோமாபுரியின் பாதிரி
யாரைக்காட்டினும் அதிகமான அத்புதங்களையெல்லாம் செய்வார். இவர்
களுடைய வாழ்க்கைச் சரிதங்களை, ஒரு கிரிஸ்தவரால் எழுதப்பட்டதை,
நான் வாசித்ததில் உலக சம்பந்தங்களையேவிட்டு வங்கானத்தையும் விட்டு
ஓய்வு எடுத்துக்கொள்ளவும் யோசித்தேன்.

நான் வட இந்தியாவில் இருந்தபோது அங்குள்ள வைதிகர்கள், வங்கா
ளத்திலுள்ள வைதிக ஹிந்துக்களைக்காட்டினும் சிறப்புற்றவரென்று கருதி
வருகிருர்களென்றும், நடை உடை பாவனையில் முஸ்லிம்களையே பின்பற்று
வதனுல் நிச்சயமாகவே ஆக்ரா லாஹூர் டெல்ஹி லக்ஷ்மணபுரி முதலிய
டங்களிலுள்ள ஹிந்துக்கள் முஸ்லிம்களைப்போலவே தோன்றுகிருர்க
ளென்றும் தெரிந்துகொண்டேன். ஆயினும் அங்கே ஹிந்துக்கள் முஸ்லிம்
களைத் தங்கள் சொந்த இனத்திலுள்ள தாழ்ந்த ஜாதியார்களை வெறுப்பதைப்
போல் வெறுக்கிருர்கள். என்னுடைய அபிப்பிராயத்தில் இதற்கு இரண்டு
காரணங்கள் புலனுகின்றன: ஒன்று, அவர்கள் இஸ்லாமார்க்கத்தைப்பற்றி
ஒன்றும் அறியாததுதான்; மற்றொன்று, அவர்கள் இஸ்லாத்தின்மீதே ஒரு
கெட்ட எண்ணத்தை உடையவர்களா யிருக்கிருர்கள். நடக்கத்தகாத சில
கைகள் நடந்ததாகக் கூறும் சில சரித்திர ஆதாரங்களைக்கொண்டு இம்
அபிப்பிராயங்கொள்ளத் தலைப்பட்டனர். நான் மில்ட்டனுடைய
க்கம் பறிகொடுத்தல்'' என்னும் புராணத்தில் அவர் ஷைத்தானையும்
கி ஸுல்தானையும் ஒன்ருக ஒப்பிட்டதை நோக்கும்போது, அவருக்
இஸ்லாமார்க்கமென்பது இன்னதென்பதே தெரியாதென்று தெரிந்து
டேன். அவருக்கு அந்த ஸுல்தான் குடும்பங்களில் நடந்ததாகக்
கூறப்படும் அபரிமிதமான செலவுகளும், கொலைகளும், இன்னும் அங்கி
ருந்த மந்திரி பிரதானிகளின் குரூரச்செய்கையுந்தான் தெரியும். சாதாரண
மாக ஒரு ஹிந்துவும் ஒரு கிரிஸ்தவனும் ஒரு முஸ்லிமைப் பிசாசு என்றே
நினைக்கிருர்கள்; அஃதாவது, மிருகங்களைவிடச் சற்று உயர்வாகவும், மனி
தர்களைவிடச் சற்றுத் தாழ்வாகவும் கருதுகிருர்கள். இக்காலத்திலும்
ஆங்கிலேயர்கள் இந்தியர்களைத் தாழ்வாகக் கருதுவதேபோல் ஹிந்துக்
களும் முஸ்லிம்களைத் தாழ்வாகக் கருதுகிருர்கள். ஹிந்துக்களுடைய

ஒரு பொதுவான எண்ணமாவது, ஒரு முஸ்லிம் அனேகம் மனைவிமார்களை விவாகம் செய்துகொண்டு சதா சர்வகாலமும் அவர்களுடன் இன்புறுகிறார் என்பதும், ஒரு முஸ்லிம் தனக்கு யாதொருதொழிலும் இல்லாவிட்டால் உடனே அவர் கத்தியை எடுத்துக்கொண்டு பசுவைக்கொன்று ஜீவனம் செய்கிறார் என்பதும்தாம். அவர் இன்று ஒரு மாதை விவாகம் செய்துகொண்டு நாளைத்தினமே அவளை விவாக விலக்குச் செய்துவிடுகிறார் என்றும், அன்றியும் அவர் கோமாம்சம் சாப்பிடுவதில் மிக்க பிரியமுள்ளவரா யிருக்கிறார் என்றும் சாமான்யமாய் நினைக்கிறார்கள். ஒருநாள் கற்றுணர்ந்த ஹிந்து ஒருவர் என்னிடம் பேசினபோது இஸ்லாம் சில தீய கொள்கைகளை யுடையதாயிருப்பதாயும்,ஒரு முஸ்லிம் தான் ஒரு ஹிந்துவின் கோவிலைத் தகர்த்துத் தரைமட்டமாக்கினாலொழியத் தனக்குச் சுவர்க்கம் கிடையாதென்று நம்புவதாயும் சொன்னார். உண்மையில் ஒரு ஹிந்து இஸ்லாத்தில் ஏக தெய்வக்கொள்கை, தொழுகை, நோன்பு, தானதர்மம், ஆண்டவன் ஆணைப்படி அடிபணிதல் ஆகிய இவைபோன்ற சிறந்த கொள்கைகளிருப்பதை ஒருபோதும் நம்பமாட்டார்.

ஒரு கிரிஸ்தவப் பாதிரி ஒருநாள் என்னுடன் பேசிக்கொண்டிருந்தபோது, "நீங்கள் என்னதான் வாதம் செய்தாலும் உங்களுடைய இஸ்லாம் உலகத்துக்கே ஒரு பொதுவான மதமாயிருப்பது முடியாது," என்று சொன்னார். அதற்கு நான் காரணம் என்னவென்று வினவியபோது, "முஸ்லிம்கள் ஒரு தினத்தின் குறிப்பிட்ட காலங்களில் தொழவேண்டியவர்களா யிருக்கிறார்கள். அவர்கள் சில பண்டிகைகளைச் சந்திரனுடைய அளவுக்குத் தக்கவாறு அனுஷ்டிக்கவேண்டியவர்களா யிருக்கிறார்கள். இப்படியாயின் கிரீன்லாந்து முதலிய தேசங்களிலிருப்பவர்கள் எப்படி இஸ்லாமார்க்கத்தை அனுஷ்டிக்க முடியும்?" என்று வினவினார். அதைக்கேட்க நான் மிக்க ஆச்சரியமடைந்தேன்! நமது மதவிஷயத்தில் இவர்கள் எவ்வளவு அறியாதவர்களா யிருக்கிறார்கள்!! ஏதாவது ஒரு மதம் பொதுமதமாயிருக்கவேண்டுமானால் அது இஸ்லாம் ஒன்றுதான். நமது நாயகவாக்கியம் அவர்களு[illegible] வேண்டிய சரியான விடையைப் பகர்ந்திருக்கிறது. ஆனால் எ[illegible] ஒரு ஹிந்து தன் பிதுர்க்கடமைகளைக் கயாவில் அர்ப்பணம் செய்[illegible] அங்கே வைசியர்கள் எப்படி நிலத்தை உழுது விவசாயிகளின் கடமைய[illegible] பயிர்த்தொழிலைச் செய்வார்கள்? அவர்கள் அங்கே யாகத்துக்குரிய நெய்[illegible]யும் சந்தனக்கட்டையையும் எங்கிருந்து பெறுவார்கள்?

அங்கே எப்படி ஒரு பௌத்தன் தன்னுடைய கொள்கையாகிய அஹிம்சா தர்மத்தைக் கடைப்பிடிக்க முடியும்? அவ்விடத்திய ஜனங்கள் மீன் பிடிப்பதையும் வேட்டையாடுவதையுமே தங்களுடைய ஜீவனத்தொழிலாகக் கருதியிருக்கிறார்கள். கிரிஸ்தவர்கள் அங்கு எவ்விதம் தங்கள் ஸாபத், கிரிஸ்துமஸ், மைக்கல்மஸ் முதலிய பெருநாட்களைக் கொண்டாடுகிறார்கள்? ஆனால் இஸ்லாம் இவை எல்லாவற்றிற்கும் பொருத்தமான வழிகளைக் காண்பித்திருக்கிறது.

பிறகு பலதார மணத்தைப்பற்றி எடுத்துக்கொள்வோம். அவர் என்னைப்பார்த்ததும், "நீர் பலதார மணத்தை விரும்புகிறீரா?" என்று வினவினார். அதற்கு நான், "ஒருவர் பலதாரமணம் இன்னதென்பதை விவரமாகத் தெளிந்து கொள்வாரானால் அதில் ஒரு குற்றமுமில்லை," என்று விடையிறுத்தேன். ஒரு பிரம்மசமாஜி என்னிடம் இவ்வாறுரைத்தார்: "உமது நபிகள் பெருமான் அனேகம் மனைவிபர்களை மணந்தார்களல்லவா?" அதற்கு நான், "இல்லை; தம்முடைய நாற்பதாவது வயது வரையில் ஒரு மனைவிக்கே உண்மையான கணவனாயிருந்து, பின்னர் பூலோக இச்சைக்காகவன்றி, தர்மத்தை ஸ்தாபிக்கும்பொருட்டு வேறு சிலரை மணந்துகொண்டார்" என்றும், அவர் உலகசுகத்தை விரும்பவில்லை யென்பது அவருடைய ஆகாரத்தினாலேயே தெரிந்து கொள்ளலாமென்றும், ஸ்ரீ கிருஷ்ண உலகத்தாருக்குப் போதிப்பதற்காகவே பல கோபிகாஸ்திரீகள் ஒரு குளத்தில் மூழ்கிக்கொண்டிருந்தபோது அவர்களுடைய ஆடைகளை மறைத்துவிட்டார் என்று சொல்வது பொருத்தமானால் அவர் நமது நாயகத்துடன் சண்டை போடவேண்டியதில்லை யென்றும் சொன்னேன். சமூக சீர்திருத்தத்தை முன்னிட்டுப் பலதாரமணம் அவசியம் இருக்கவேண்டியதாயிருக்கிறது. இதன் உண்மையை இவ்வுலக ஜனக்கணிதத்தினால் அறிந்து கொள்ளலாம். இப்போது மகாயுத்தத்துக்குப் பின்னே ஐரோப்பாவின் நிலையைப்பாருங்கள்! பலதாரமணமென்பது மனிதர்களுக்கு இயற்கையாக உண்டாகக்கூடிய தூண்டுதலாகும். வேசிகளின் வீடுகளுள்ள ஒரு தெருவைச்சுற்றிப் பார்ப்போமானால், அங்கே [illegible]சல்லும் பால்யர்களெல்லாம் பிரமசாரிகளா? அல்ல. அவர்களும் அவரவர் வீடுகளில் ஓர் அழகிய மாதைத் தம் மனைவியாக வைத்துக்கொண்டிருக்கிறார். ஆகையால் அவர்கள் மனைவியை யிழந்தவர்களுமல்ல. இதனால் அவனுக்கு ஒரு மனைவி போதாதென்பது விளங்கவில்லையா? ஒரு தேசத்தை வியபிசாரத் தனத்தினின்றும் விடுவிக்கக் கூடியது பலதாரமணமும் பர்தா வழக்கமும்தாம். (தொடரும்.)



[illegible]ள் முரடர்கள் தாமோ?—கல்கத்தாவில் ஹிந்துப்பெண் [illegible] ஹிந்து ஸ்திரீகளும் அடிக்கடி தூக்கிக்கொண்டு போகப்படுகிறார்களாம். அவர்களைத் தூக்கிச் செல்வோர் பெரும்பாலும் முஸல்மான்களாகவே யிருக்கிறார்களென்று அவ்வூர் "முஸல்மான்" பத்திரிகை எழுதுகின்றது. இப்படிப்பட்ட செய்கையைக் கேட்டு முஸ்லிம்கள் வெட்கத்தினால் தலைகுனிய வேண்டாமாவென்றும், இப்படிப்பட்ட கேஸ்களில் முஸ்லிம்கள்--அவர்கள் இழிசனரே

யாயினும்—கைதிகளாய்க் கோர்ட்டில் நிற்பதை யொழிப்பதற்கு மற்றை நண்பர்கள் முழுதும் பிரயத்தனப்படவேண்டுமென்றும், இதற்காக ஹிந்து ஸ்திரீகளையும் புருஷர்களையும் நொந்துகொள்ளாமல் நமக்கு நாமே சீர்திருத்தம் செய்துகொண்டு நம்முடைய விடப்புருஷர்களை நன்றாகக் கல்விகேள்வி நாகரிக நல்லொழுக்கங்களில் தேற்றுவிக்கவேண்டுமென்றும் அவ் வாசிரியர் கூறுகின்றார். என்ன கேவலம்! இஸ்லாத்தில் வியபிசாரமானது முற்றிலும் மறுக்கப்பட்டிருக்கும்போது என்னே இம்முஸ்லிம்கள் இக்காலத்தில் இவ்வளவு கேடு கெட்டுவிட்டனர்!

முஸ்லிம்களின் கல்விக்குறைவு:—இந்தியாவில் சுயராஜ்ஜியம் பெறுவதற்கு இடையூறா யிருப்பது பொது ஜனங்களின் கல்விக் குறைவே யென்றும், இப்படிப்பட்ட நிரக்ஷரகுக்ஷிகளுள் பெரும்பான்மையோர் முஸல்மான்களாகவே யிருக்கிறார்களென்றும் "இண்டியன் டெய்லி மெயில்" என்னும் பத்திரிகை கூறுகின்றது. இந்தியாவிலிருக்கும் ஆதிக்குடிகளாகிய ஒருகோடி மனிதர்களைத் தவிர்த்து மற்றை ஜாதியார்களை யெல்லாம் ஒருவரோடொருவர் ஒப்பிட்டு நோக்குங்கால் பொதுவாக முஸ்லிம்களே கல்வி விஷயத்தில் மகா பாதாளத்தி லிருக்கிறார்களென்று "மாடேர்ண் ரெவ்யூ" காரரும் எழுதுகிறார். ஆதிக்குடிகளும் ஆதி திராவிடர்களும் தேசிய விஷயத்தில் அதிகம் தலையிட்டுக் கொள்ளாததால் அவர்களைச் சார்ந்த மட்டில் கல்வியின்மையானது ஒரு பெருங்குறையாய்க் காணப்படவில்லை. ஆனால் ராஜீய தேசிய விஷயங்களில் முழுப்பங்கும் எடுத்துக்கொள்ளக்கூடிய முஸ்லிம்களின் கதியானது இவ்வாறிருப்பது தான் மிக்க கவலைக்கிடமாயிருக்கிறது.

ஆனால் ஜனக்கணிதக் கணக்குச் சோல்வதென்ன?—1921 வருஷத்து ஜனக்கணிதக் கணக்கின் முதல் புத்தகத்தில் இவ் காணப்படுகிறது: "ஹிந்துக்களுள் 13க்கு ஒருவர் படித் யிருக்கிறார்; ஆண்களுள் 8க்கு ஒருவரும் பெண்களுள் 6 வரும் படித்தவர்....11 முகம்மதிய ஆண்களுள் ஒரு முகம்மதியப் பெண்களுள் ஒருத்திக்கும் எழுதப் யும் .... பம்பாயிலுள்ள போராக்களும் சென்னையி களும் மாப்பிள்ளைகளும் ஒருசிறிது அதிகம் படித்திரு ஐக்கிய மாகாணத்திலுள்ள ஸையத்கள் பிராம்மணர்களை காட் னும் அதிகம் கற்றிருக்கிறார்கள்.

படித்தவர்களின் கணக்குக்குறிப்பு:—இதனடியிற்கா ணும் பானது ஹிந்துக்களுள்ளும் முஸல்மான்களுள்ளும் 1921 ஜன கணிதப்படி 1,000க்கு எத்தனை ஆண்களும் பெண்களும் எழுதப்

படிக்கத் தெரிந்துகொண் டிருக்கிறார்களென்பதை மாகாணவாரியாய்ச் சுட்டிக் காட்டுகின்றது.

	ஹிந்து.		முஸல்மான்.	
	ஆண்.	பெண்.	ஆண்.	பெண்.
இந்தியா (முழுதும்)	130	16	93	9
அஜ்மீர்-மர்வாரா..	140	15	187	18
அஸ்ஸாம்.	167	18	85	5
வங்காளம்.	268	36	109	6
பீஹார், ஒரிஸா.	101	6	99	8
பம்பாய்.	151	21	114	15
பர்மா.	288	86	302	87
மத்திய மாகாணம், பீரார்.	89	8	225	27
டில்லி.	150	26	182	31
சென்னை மாகாணம்.	170	21	201	18
வடமேற்கெல்லை மாகாணம்.	346	98	33	2
பஞ்சாப்.	113	11	37	4
ஐக்கியமாகாணம்.	71	6	73	8
பரோடா.	234	42	309	48
மத்திய இந்தியா.	56	4	169	19
குவாலியர்.	60	6	142	26
ஹைதராபாத்.	47	4	140	35
காஷ்மீரம்.	124	6	20	1
மைசூர்.	133	16	238	62
ராஜபுதனம்.	57	3	66	9
ஸிக்கிம்.	91	3	83	3
திருவாங்கூர்.	371	146	238	50

கல்விக் குறைவுக்குக் காரணபூதர் யார்?—ஆரம்பக் கல்வியா இந்தியருக்குக் கட்டாயக் கல்வியாக ஆக்கப்படாம லிருப் ஆர் காரணபூதர்? இந்தியரின் முன்னேற்றத்துக்காகவே ளுவதாகக் கூறும் ஆங்கிலேயர் இதற்காக என்செய் சுயராஜ்யம் கேட்டால் இந்தியருக்குக் கல்வியில்லை து முஸ்லிம் ஒற்றுமையில்லை யென்றும் அன்னூர் இந்திய வர்த்தக சங்கத்தார் காலமுதல் ஹிந்து முஸ் மைக்காக வல்லாமல் இவர்களின் ஒற்றுமைக்காக இந்த தியார் என்ன செய்திருக்கின்றனர்? சுயராஜ்யம் பெற ல்வியில்லை யென்பார் கவர்ண்மெண்டார். எங்களுக்குக் வேண்டுமென்றால் அதற்குப் பணமில்லையென்பார் போடும் துரைத்தனத்தார். சுயராஜ்யத்துக்கோ க்கோ பணமில்லை. ஆனால் இந்தியாவில் வசூலாகும்

திறைப்பணத்தில் ஒரு பாதிக்குமேல் (சுமார் 60 கோடிக்குமேல்) இராணுவத்துக்காகச் செலவிடுகின்றனர். ஏன் இவ்வளவு இராணுவ மென்றால் கல்வியறிவில்லா இந்திய மூடர்களையும் மூர்க்கர்களையும் அடக்கியாள்வதற்கு அவசிய மென்கின்றனர். என்னே ஆன்றோரின் விந்தையான தர்க்கம்!

முஸ்லிம் பெண்களுக்குக் கட்டாயக் கல்வி:—சென்னை நகர பரிபாலன சபையார் இந்நகரில் முஸ்லிம் சிறுமிகளைத் தவிர்த்து மற்றை வருணச் சிறுமிகளுக்கெல்லாம் கட்டாயக்கல்வி புகட்டவேண்டு மென்று முன்னொருசமயம் தீர்மானம் செய்திருந்தது நம்நேயர்களுக்குத் தெரியுமன்றோ? ஆனால் சென்ற 15-11-24, சனிக்கிழமையன்று மௌண்ட்ரோட் லாலீ ஹாலில் கூடிய "தென்னிந்திய முஹம்மதிய கல்விச் சங்கத்தாரால்" ஒரு தீர்மானம் கொண்டுவரப் பட்டு அதிகமான அங்கத்தினர்களால் ஆமோதிக்கப்பட்ட தென்பதைக் கேட்கச் சந்துஷ்டி யடைகின்றோம். முஸ்லிம் சிறுமிகளின் பர்தா வழக்கத்துக்குப் போதுமான ஏற்பாடுகளுடன் மத்தக்கல்வியும் போதிக்கும்படியான விதத்தில் ஆரம்பக் கட்டாயக்கல்வியின் சார்பாக முஸ்லிம் சிறுமிகளையும் உட்படுத்திக்கொள்ளவேண்டு மென்று சென்னை அரசாங்கத்தாருக்கும் நகரபரிபாலன சபையாருக்கும் விண்ணப்பஞ் செய்வதென்று தீர்மானித்திருக்கிறார்கள். இது மிகவும் பாராட்டத்தக்க விஷயமே. அறிவு சீனாவிலிருந்தபோதிலும் அங்கேயும் சென்று முஸ்லிம் ஆண்களும் பெண்களும் கல்வி கற்க வேண்டுமென்று நம் நபிகள்பிரான் திருவாய்மலர்ந்தருளியுள்ளார்.

ஹிந்துமுஸ்லிம் ஒற்றுமைக்கு உதவிதேடல்:—இச்சென்னை யம்பதியிலும் மற்றுமுள்ள இடங்களிலும் பற்பல ஹிந்துக்களின் ஹோட்டல்களுள் முஸ்லிம்கள் பிரவேசிக்கக்கூடாதென்னும் தடை யுத்தரவானது அனுஷ்டானத்தி லிருந்துவருவது உங்களெல்லோ ருக்கும் தெரியும். "மதராஸ் ஹோட்டல்காரர்களின் சங்க[illegible] இப்படிப்பட்ட விலக்கலை ஒழித்துவிடும்படி எல்லா [illegible] களுக்கும் ஸிபாரிஷ்செய்யும்படி சென்னை "ஹிந்து[illegible] தர சங்கத்தார்" கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். [illegible] மும் பலமுறை இச் சஞ்சிகையில் எழுதியுள்ளோம். [illegible] யத்திலுள்ள இச்சிறிய தீண்டாமை யென்னும் அபசார[illegible] காதமட்டில் முஸ்லிம்களின் மனமானது வேதனையினின்[illegible] போதும் ஒழிந்திருக்கமாட்டாது. சாமான்ய ஹிந்துக்க[illegible] களையெல்லாம் மிலேச்சர்களென்று கருதியிருக்கு[illegible] முஸ்லிம் ஒற்றுமைத் தலைவர்கள் மட்டும் சிற்சில [illegible] பந்திபோஜனம் செய்வதால் மட்டும் ஒன்றும் உ[illegible]

றுமை உண்டாகமாட்டாதென்பது எமது ஆழிய அபிப்பிராயமாகும். ஆனால் இப்படிப்பட்ட இழிவை ஒழிப்பதற்கு ஹிந்து சகோதரர்கள் முழுப்பிரயத்தனத்தையும் எடுத்துக்கொள்வார்களென்று எதிர்பார்க்கிறோம்.

தாருல் இஸ்லாமும் மாற்றுப் பத்திரிகையும்:—நாம் நம்முடைய பத்திரிகையை வேறு சில பத்திரிகைகளுக்கு மாற்றுப்பத்திரிகை யாக அனுப்புவதில்லை யென்பது வாஸ்தவமே. எம்மால் கூடிய மட்டும் சுமார் 50 பத்திரிகைகள் வரையில் மாற்றுப்பத்திரிகை அனுப்பியே வருகிறோம். எம்முடைய பத்திரிகையிலுள்ள விஷயங்களுடன் அபிப்பிராய பேதங்கொண்டு வேறு சிலர் தங்களுடைய பத்திரிகைகளில் தங்களுடைய சொந்த அபிப்பிராயத்தை எழுதிக்கொள்வதில் எமக்கொன்றும் ஆக்ஷேபமில்லை; ஆனால் அதிக சந்தோஷமே, ஏனெனின், தங்களுடைய சிஷ்யர்களுக்குள் அபிப்பிராயபேதம் ஏற்படுவதானது முன்னேற்றத்துக்கே அடையாளமாகிய நன்மையாகுமென்று நபிகள் பெருமானே கூறிப்போந்தார்கள். ஆதலின் கௌரவமான கண்ணியமுள்ள அபிப்பிராய பேதங்களை நாங்கள் மிகவும் விருப்பத்துடன் ஏற்றுக்கொள்ளக் கடமைப் பட்டுள்ளோம். ஆனால் பத்திரிகா தர்மத்துக்கே முற்றிலும் முரணை விதத்தில்—பத்திரிகா தர்மமிருக்கட்டும்; கேவலம் மானு[illegible]க தர்மத்துக்கே முற்றிலும் மாறான முறையில்—எம்மைப்பற்றி [illegible]ழுதத் துணியும் பத்திரிகைகளுக்கு யாம் எவ்வாறு எங்களுடைய சஞ்சிகையை மாற்றுப்பத்திரிகையாக அனுப்ப மனமாரக் கட்டுப் பட்டிருக்கிறோமென்பது விளங்கவில்லை. பத்திரிகா தர்மநெறியை உணர்ந்துகொள்ளப் பிரயத்தனப்படாமல் ஒழுகிவரும் எவருக்கும் எங்களுடைய "தாருல் இஸ்லாத்தை" அனுப்பமாட்டோம். இம் [illegible]றமைக்கு மு[illegible]றை நடக்கிறார்களா? இல்லையா? என்பதைப் [illegible]வரவரும் [illegible] தம்முடைய நெஞ்சைத் தொட்டுப்பார்த்துக் [illegible] தையுடன் நடந்துகொள்பவருக்கு யாமும் [illegible] பத்திரிகை யனுப்பியேவருவோம்.

சில ருசிகரமான கடிதங்கள்

[illegible] கடிதம்:—படைத்து ரக்ஷித்துப் பல்பெயர்களுக்கும் [illegible] எந்த இறைவனுண்டோ அந்த இறைவனுடைய

தெள்ளிய திருத் தூதராகிய முஹம்மது முஸ்தபா ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் நற்கிருபை தங்கிய ஜனுப், பா. தாவுத்ஷா சாஹிப் அவர்களது திருச் சமுகத்திற்கு. தங்களால் பிரசுரிக்கப்பட்டுவரும் "தாருல் இஸ்லா" மென்னும் மேன்மைதங்கிய மாதாந்தசஞ்சிகையைக் காதியானிக்கொள்கையெனச் சிலர் வேற்றுமைப்படுத்த முயன்றுவரும் முழு விவரங்களும் பல தவணைகளாகக் கண்ணுற்று வருத்தமடைந்திருக்கின்றேன். ஆனல் எனது மனத்திற்கு அந்தப்படி அது காதியானிக்கொள்கையைப் பற்றி யாது படிப்பிக்கிறதென நாளிதுவரை புலப்படாமல் என்னைக்கேட்கும் சில நண்பர்களிடம் இதெல்லாம் பொருமைக்காரர்களின் கூற்று என நாளடைவில் விடைபகர்ந்திருக்கின்றேனேயொழிய வேறு தெளிவாகச் சொல்லப் பலவழிகளிலும் ஆலோசித்துப்பார்த்தும் புலப்படவில்லை. "சாதனையின்றி ஒன்றைச் சாதிப்பார் உலகிலில்லை" என்னும் பழமொழிக்கிணங்க இவர்களின் சாதனை ஒன்று இருந்திருக்கவேண்டுமே. யா ரப்பே! அதை யாரிடம் கேட்டறிகிறது? என்ற நோக்கத்துடன் நன்கு கவனத்துடனிருக்கும்போது இவ்வாண்டு ஆவணிமாதம் 10ந்தேதியன்று சிற்சில வேலையினிமித்தம் நான் நாகர்கோவிலுக்குப் போகநேர்ந்தது. அங்கே சிலமாதங்களுக்கு முன்னர் என்னல் நமது சஞ்சிகைக்குச் சந்தாதாரராகச் சேர்க்கப்பட்ட ஓர் முஸ்லிம் சகோதரரைக் கண்டேன். அவர் என்னைக்கண்டவுடன் புன்சிரிப்புடன் 'தாங்கள் சிபாரிஷ் செய்து வரவழைத்த "தாருல் இஸ்லாம்" சஞ்சிகையை வேண்டாமெனத் தீர்மானித்து வந்த வி. பி. யையும் திருப்பி அனுப்பிவிட்டேன்' என்று மனமகிழ்ச்சியுடன் சொன்னர். நான் உடனே
"தாங்கள் அவ்விதம்செய்யக் காரணமென்ன என்பதைச் சற்றுத் தய
செய்து தெரிவிக்கவேண்டும்" என்று மிகத் தாழ்மையுடன் கேட்டதற்கு
டையார் "அது காதியானிக் கொள்கையல்லவா!" என்றார். நான் அது
காதியானிக்கொள்கையைப்பற்றி என்ன போதிக்கிறதென்று கேட்டதற்கு
அவர் மறுபடியும் அது காதியானிப் பத்திரிகைதான் என்றார். நான், "அன்
பரே! என்மீது கோபிக்கவேண்டாம்; தாங்கள் அருளி[...]து ஊமையன் க
கண்ட கதைபோலிருக்கிறதே தவிர வேறொன்றுமி[...]. தாங்கள் ெ
கொள்கையை இன்னதெனத் தெரியச் சொன்[...]ய எவ்வி
குத் தெரியக்கூடும்?" என்றேன். அதற்கு அ
டை பத்திராசிரியருக்குச் சில வினக்கள் எழுதிக்
நாளிது வரையில் பதில் எழுதவில்லை. காதியா
தால் எனது கடிதத்திற்குப் பதில் எழுதியிருக்க மாட்
நான், "ஒரு பத்திரிகை ஆசிரியருக்கு என்னென்ன ஜோ
மெனத் தங்களுக்குத் தெரியுமா? தாங்களொரு சந்தாதாரரெ
துப் பதில் எழுதுவதென்றால் சாத்தியமல்ல. தங்களைப்போல்
மேதாவிகள் இவ்விதம் தப்பர்த்தம் கொண்டு எழுதக்
கெல்லாம் பதிலெழுதுவதென்றால் அதே ஜோலி
டை சஞ்சிகையை நடத்திவர எவ்விதம் முடியும்? ஆ

லாம் சமாதானமாகப் பலமுறைகளிலும் பிரசுரித்து வந்திருக்கிறார்கள். அதுவுமன்றிச் சென்ற ஆகஸ்ட்மாதச் சஞ்சிகையில் 368-வதுபக்கத்தில் 'எம்மைத் தூஷிப்பதால் யாதுபயன்?' என்ற தலையங்கத்தின்கீழ்ச் சிலவிஷயங்கள் எழுதியிருப்பதைத் தாங்கள் கவனிக்கவில்லையா? அதைக் கவனித்துமா தாங்கள் தவறுதலடையவேண்டும்? தாங்களும் தங்களைப்போலொத்தவர்களும் "தாருல் இஸ்லா"த்தின்மேல் கொண்டிருக்கும் தவறான எண்ணங்களை மாற்றி நல்லெண்ணத்துடன் டைசஞ்சிகையை ஆதரிப்பதோடு பரிசுத்தமான இஸ்லாத்தின் நெறியைக் கடைப்பிடித்தொழுகும்படியே தூண்டுகிறதல்லவா!" என்று சொல்லிவிட்டு அவர் விரும்பியதன்மீது அப்பத்திரிகையைக் காட்டியதும் அவர், "எப்படியிருந்தபோதிலும் நாம் ஆதரிக்கவேண்டியதுதான். தற்சமயம் கையில் பணமில்லாததால் வி. பி. யைத்திருப்பி விட்டேன்" என்றார். நான், "………பணமில்லாது போனல் பத்திரிகை வேண்டாமெனத் தெரிவிப்பது கேவலமெனக்கருதி ஏதேனுமோர் குற்றத்தைச் சுமத்துவது தங்கள் மனச்சாக்ஷிக்குப் பொருந்துகிறதா? தங்களைப் போலொத்தவர்கள் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் ஆதரிப்பதைவிட அடியோடில்லாதிருப்பதே மேலானது" என்று சொல்லி அனுப்பிவிட்டேன். ஆகையால் இவ்வித வீண்வாதங்களில் தலையிட்டுத் தங்களின் மேன்மைதங்கிய மெய்யான அரியபெரிய முயற்சியைக் குன்றச்செய்யாது சத்திய இஸ்லாத்தின் உத்தம வெற்றிக்கொடியை நித்தமும் நேர்வழியில் பறக்கச் செய்துவரும் ஊக்கத்தைத் தவறவிடாது நடத்துவீர்களாக. அப்படிச் செய்ய எங்
ம் நிறைந்த இறைவன் தங்களுக்கும் தங்கள் குடும்ப பந்து மித்திரர்களுக்
கும் நோயற்றவாழ்வையும் குறைவற்ற செல்வத்தையும் தீர்க்காயுளையும் தந்து என்றென்றும் அருள்புரிவானாக ஆமீன்.

வெண்பா (போன்றது)

தாருல் இஸ்லாத்தின் தரிபாடு இன்னதென
நேரில் [...]றியாமல் நிந்தையதாய்க்—கூறுபவர்
குருடர் [...]யைக்கண்ட கொள்கைபோல் இஸ்லாத்தின்
நெறி[...]ர்கள் நிகழ்ந்து.

னம் : தங்களன்புள்ள, என். கே. எம். அப்பாஸ்.

க் கடிதம்:—கனமிக்க ஆலீஜனுப், பா. தாவுத்ஷா
கு. அஸ்ஸலாமு அலைக்கும். இறைவனருளால் நன்கமையப்
ஹீருல்புர்கான் பீ தர்ஜுமத்தில் குர்ஆன்" முதல் வெளியீடா
ற்றேன். நெடுங்காலமாக எதிர்பார்த்திருந்தவை கிட்டியதும்
மகிழ்ந்தெழுதாமலிருக்க முடியவில்லை. நம் தமிழ்நாட்டாரனை
னும் சரி—தங்கள்பால் நன்றிசெலுத்தக் கடமைப்பட்
ம்கள் பலர் நம் திருமறையின் வியாக்யான விஷயங்
தரிந்துகொள்ள முடியாமல் இதுவரையில் காலழ்

கடத்திச் சென்றவர்கள் எத்தனை! ஆதலால் புதிய தமிழுலகு ஆரம்பமாயிருக்கிறதென்றே கூசாமல் சொல்லலாம். எண்ணத்தொலையாத தமிழ்நாட்டு முஸ்லிம் மௌல்விகள் இதுவரையில் இவ்வேலையி லீடுபடாமல் காலங்கடத்திச்சென்றதும் காலங்கடத்துவதும் துரதிருஷ்ட வசமேயாகும். அதனை ஒருவாறு நிவர்த்திக்கவந்த தங்களின் மேலான நன்னோக்கத்திற்கு அன்னார் உதவி புரியாவிடினும் இடையூறிழைக்காமலிருத்தலே பெருங் கைங்கரியமாகும். ஏனெனின் நம் நாடானது மௌட்டீகத்தா லனேக இடையூறுகளாலுழல்வதைத் தெரிந்துகொண்டிருப்பீர்கள். இவைகளெல்லாம் பகுத்தறிவை நன்குபயோகப்படுத்தாததனாலேயே நிகழ்கிறதென்பதை யார்தான் மறுக்கத் துணிவர்? தூரதேசத்திலிருக்கும் ஓர் பந்துவோ அல்லது நண்பரோ ஒரு லிகிதம் நமக்குத் தபால் மூலமாக அனுப்பிவிட்டா லதனை எவ்வளவோ சந்தோஷத்துடனும் ஆர்வத்துடனும் அதைத் திருப்பித் திருப்பி வாசித் தகமகிழ்ந்து விஷயங்களைத் தெரிந்துகொள்கிறோம். அச்சிறுலிகிதத்துக்கு நமக்கவ்வளவு ஆவலிருந்தால் நம்மைப்படைத்துக் காத்து ரக்ஷித்தாளும் நமதெஜமானன அந்த மாலிக்கின் இம்மகாலிகிதமாகிய திருமறையை வாசித்தறிந்திருக்கிறோமா வென ஒவ்வொருவரும் தம்மையே வினவின லப்போது விழித்துக்கொள்வர். உடல் பொருளாவி மூன்றையும் தியாகம்செய்த புண்ணிப சீலரே! தாங்களெடுத்த நற்கருமம் இனிது நிறைவேறுமாறு எல்லாம் வல்ல நாயனருள் புரிவானாக. அடுத்தவெளியீடுகள் ஒவ்வொன்றும்,...சீக்கிரம் வெளிவருமென் றெதிர்பார்த்திருக்கிறேன். டைட்டில் பேஜில் கண்ட
"வாசகர்களுக்" கென்ற குறிப்பில் இத்திருமறையை வாசிக்கவேண்டி
ஒழுக்கமும் பத்திரப்படுத்தவேண்டிய நியதியும் குறிப்பிடுதல் நலம். ஏ
னின் எப்போது தாய்பாஷையாம் செந்தமிழில் வெளிவந்துவிட்டதோ
அப்போதே எல்லாமதத்தார்களும் பெரிய பண்டிதர் முதல் சாமான்ய படிப்புள்ளவர்களுள்பட வாங்கிப் படிக்கநேரிடும்; ஆதலால் அன்னார்க்கு இதனருமையையும் கையாளுமுறைமையையும் நன்கு தெரியப்படுத்தவேண்டும்.

இங்ஙனம்: பா. முகையதீன் பாஷா. (அய்யம்பேட்டை.)

பத்தாங் கடிதம்:—அஸ்ஸலாமு அலைக்கும். அர்ர மானின் திரு
துணையை ஆதாரமாய்க் கொண்டும் தங்களின் இனி யற்சியா
பெற்றும் திங்கள் தோறும் தவறாது மங்க
"தாருல் இஸ்லாம்" என்னும் அழகிய மகுட
நம் தென்னாட்டுத் தமிழுலகிலுள்ள முஸ்லிம்கள
எனையோருளத்திலும் ஊடுருவிச் சென்று, அன்
கண்ணின் அஞ்ஞான அந்தகாரத்தை யகற்றி மெய்ஞ்ஞான
பிரகாசிக்கச்செய்து இகபர சாதனங்களுக்குரிய லௌகிக
களைச் சீர்பெறத் திருந்தச்செய்வதில் முதன்மையான நன்
இருக்கின்றதென்பது உலகோரறிந்த மிகத் தெளிவான உ
இன்னமும் நம் தென்னாட்டுத் தமிழறிவாளரும் முக்கி
சோதரிகளும் மேன்மேலும் அதிகமான நன்மைய
யும் அடைவான்வேண்டி அல்லா(ஹ்)வின் அரிய

தங்களின் இனிய முயற்சியின் பலனாகவும் அதிசீக்கிரம் வெளிவந்திருக்கும் ஜவாஹிருல் 'புர்:கான், என்னும் :குர்ஆன்ஷரீ'பின் தமிழ்மொழிபெயர்ப்பைக் கண்டதும் எம்போன்ற முஸ்லிம்சோதர சகோதரிகள் எவ்வளவு ஆவலாய் எதிர்சென்றழைத்து இருகரமேந்திச் சிரமேற்றாங்கிக் கண்காணித்துக் கல்புக்களிகூர்ந்து ஆனந்தவாரிதியி லமிழ்ந்து அல்லாஹ்வினிடத்தில் தங்கட்கு எல்லா நலனும் உண்டாகும்படி குறையிறைஞ்சுகின்றார்க ளென்பதை இறைவனே யறிவானன்றி என் சிற்றறிவா லதனை இயம்ப இயலாதவனாய் இருக்கிறேன். ஆ என்னருமை முஸ்லிம்சோதர சோதரிகாள்! நீங்களெல்லீரும் இதற்கென் செய்யப்போகின்றீர்கள்? நம் முன்னோரின் முற்போக்கான உண்மைக் கொள்கைகளையும் உத்தமச் செயல்களையும் அரிய அமல்களையும் கை நழுவ விட்டுவிட்டு அன்னாரல்லாதாரின் பிற்போக்கான மூடக்கொள்கைகளையும் மூர்க்கச்செயல்களையும் அதமக்காரியங்களையும் அதிகமாய்ப் பின்பற்றியொழுகினதாலன்றோ இவ்வுலகி லிதுசமயம் நம் முஸ்லிம் சமூகமானது மிகத் தாழ்மையான நிலைமை யடைந்திருக்கின்றதென்பதை ஈண்டு யாணியம்பத் தேவையில்லையாயினும் நம்மனோரின் அறியாமையால் விளைந்துள்ள இத்தாழ்மையான வீழ்ச்சியை விட்டு மீட்சிபெறவும் துன்மதியை விட்டுத் தூய்மையுறவும் மேனாட்டு நாகரிகமெனும் அனாகரிகப் பழக்கவழக்கங்களுக் கடிமையாகியதனா லந்தகாரமே நிறைந்துலாவும் நம்மவருளத்தின் அறியாமை என்னும் காரிருளைப்போக்கிப் பேரொளியை யளிக்கவந்த பேருபகாரியரான கனம்தங்கிய ஹஜரத் பா. தாவுத்ஷா ஸாஹிப் அவர்களின்
தாபதேசங்களைச் செவியேற்றும் அன்னார் பத்திரிகைவாயிலாகப் புகட்டி
ம் நற்போதனைகளைப் பின்பற்றியும் இஷா அத்தே இஸ்லாத்தி னிமித்
ம் அவர்கள் உரைக்கும் உபதேசங்களை இவ்வுலகமுழுதும் நன்கு பரவச்
செய்வதில் மிகுதமாய் முன்வந்து ஈடுபடுங்கள். உடல் பொருள் ஆவி இம்மூன்
றையும் தத்தம் செய்தாயினும் நம்முஸ்லிம்களின் நன்மையையும் முன்னேற்
றத்தையும் தங்களின் முக்கிய ஊழியமாகக் கருதி அல்லும் பகலும் அனவர
மும் அரும்பாடுபட் ழைத்துவரும் மேன்மைதங்கிய ஹஜரத் தவர்களின்
டா இனிய முற்சியின் பலனானது (:குர்ஆன் ஷரீ'பின் மொழி
வேலைய றிதளவும் தளருறாது நன்கு நிறைவேறுமாறு
லும் மனத்தாலும் இனத்தாலும் உதவிபுரிய
இவ்வாறு நீங்கள் செய்யும் சிறிய உதவியால்
நம் கைங்கரியமான சுத்தசத்திய சன்மார்க்க
ப் பயன்படுவதால் உங்களுக்கு இறைவனரு
ராயமும் என்றென்றும் குன்றாது நின்று நிலவுவது
லிம்சோதரசோதரிகளின் ஆத்மஞானம் பூர்த்தியாய்ப் பிரகா
தனா லதிசீக்கிரம் நம் இஸ்லாமிய உலகமானது இனி இல்லா
மையுடன் வியாபித்து வளர்ந்தோங்கி வருமென்பதை எம்
வுடன் அடியிற்காணும் அழகிய திருவாக்கியத்தா
றிவித்துக்கொள்கிறேன். லில்லாவிற் களிப்போர்
ர். கனம்தங்கிய ஹஜரத்தவர்களே! அல்லாஹ்

வின் அருளாலும் தங்களின் மிகப்பெரும் பிரயாசையாலும் இந் நில வுலகில்
உதயமாகி ஷிதம் செய்துவரும் தெய்வத்திருமறையான தமிழ்ப் பொரு
ளுரைக்கு எம்மாலியன்றளவு சிறிதேனும் பொருளீய இயலாதவனுயினும்
எம் கடமையை யுணர்ந்து அதனைக் கிஞ்சித்தாவது செய்வான்வேண்டி
இத்துடன்தங்களின் இனியவிலாசத்திற்குப்போஸ்ட்டல் ஆர்டர்மூலம் ரூபாய்
(27)இருபத்தேழுரூபாயும் அனுப்பியுள்ளேன். அதனை யங்கீகரித்துக்கொள்வ
துடன் எமது விலாசத்திற்கு ஜவாஹிருல் புர்கான் மூன்று அனுப்பிவைப்ப
துடன் எம்மையும் ஓர் ஸ்ரந்தர சந்தாதாரராய்ச் சேர்த்துப் பதிவு செய்து
கொள்ளுமாறு அதி தாழ்மையாய்த் தெரிவித்துக்கொள்கிறேன். இன்ஷா
அல்லாஹ், இன்னும் சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்ப முயற்சிசெய்கிறேன்.
இங்ஙனம்: தங்களுண்மையுள்ள ஊழியன், ஆ. பாப்புஸாஹிப்.

இரங்கூன் கடிதம்:—அருளாளனும் அன்புடையோனுமாகிய அல்
லாஹ்வின் திருநாமத்தால். உலகத்தில் மானிடப் பிறவிக்கேற்றதாயும்,வாழ்க்
கைக்குச் சுகமும் நிம்மதியும் தருவதாயும், இம்மை மறுமைக்குப் பயன்படக்
கூடியதாயும், அன்பு, சமத்துவம், சகோதரத்வ மிவைகள் சதா குடிகொண்
டிருக்கும்படியாயும், தன் ஸ்வயபுத்திக்குமேல் பகுத்தறிவை உபயோகப்
படுத்தவேண்டியதாயுமுள்ள பல ஆத்மஞான இதிகாஸங்களை அதி சிலாக்ய
மாகவும், மஹா உசிதமாகவும் இதோபதேசஞ் செய்துவரும் சுத்த ஸாது
ஸூபியான சன்மார்க்க சற்குண சீலரே! அஸ்ஸலாமு அலைக்கும். ஆகஸ்ட்மீ
சஞ்சிகையில் தாங்கள் விடுத்துள்ள வினவிற்கு நான் விடையளித்த
பயனாகத் தாங்களெனக் களித்துள்ள "ஜவாஹிருல் புர்கான்" என்
சுத்த சத்திய சன்மார்க்கத் திருமறையின் செந்தமிழ் மொழிபெயர்ப்புப் ப
யொன்றை 9-9-24-ல் கிடைக்கப்பெற்றேன். சரியான அர்த்தமும் வி
வான வியாக்யானமும் ஒருங்கேயமைந்த அவ்விண்ணூலை என் சென்
மேற்றடவி இருகண்ணிலும் முத்திட்டு, விரித்து முன்னுரைமுதல்முடிவு
வரை தளராது ஓதியதன் கருத்தை யுணருங்கா லித்துணை யுன்னத மேவி
செந்தமிழ்த் திருமறை யிதுகாறுமித் தமிழுலகினருக்குக் கிட்டாமற்
ஹது ஒரு பெருந்தீராப் பிணிபோ லிருந்திருக்கி தன்பதற்குக்
தும் சந்தேகமில்லை என்றுணர்ந்தேன். தெ ததும்பி
குருடர்களுக்கு மறு இருவிழிகளோ டொளி
அறிவிலிகள் பழித்துப் பறைசாற்றுகின்றனர்.
யாமை! முன்னுரையை யறியாது முணுமுண
என் சொல்லியும் கண்விழியார். எவ ரென்சொ
கொடிநாட்டிப் புத்திபுகட்டப் பிறந்த புண்ணியருக்கு
அத் திவ்விய கிரந்தத்தைப் புகழ யாரால் முடியும்? அருமையு
வாய்ந்த அழகிய சொற்பொழிவுகளே அதற்குப் புகழ்ச்சி. எ
ச்சி அவற்றிற்கு இணையாகாது. இத்துணை யுன்னத
செந்தமிழில் மொழிபெயர்த்த திவ்விய புருஷர் ந
லாம்" சஞ்சிகைக்கு இன்றிலிருந்து ஒரு சந்தாதா
உண்டாயிற்று; அதுபோலவே சேர்ந்தும்விட்டேன்

மூர்த்தியின் கிருபையால் நாமனைவரும் ஈமானிலும் இஸ்லாத்திலும் நிலைநிற்
போமாக. ஆமீன். இங்ஙனம்: ம. கா. மு. முஹம்மத் இப்ராஹீம்.

மலாக்காக் கடிதம்:—என் அருமைச் சினேகர் கனம் பா. தா. அவர்
கட்கு, அஸ்ஸலாமு அலைக்கும். தாங்களனுப்பிய குர்ஆன் மொழிபெயர்ப்
பின் பிரதியொன்றும் "முஸ்லிம்களின் முன்னேற்றம்" ஒன்றும் கிடைக்கப்
பெற்றேன். குர்ஆன் மொழிபெயர்ப்பைப்பற்றி முன்னமே என் மனமானது
பற்றுதலடைந்திருந்தது. முதல் வெளியீடு பூர்த்தியாகி வெளிவந்து
விட்டதெனத் தெரிந்ததும் மிக்க சந்தோஷமடைந்தேன். அது என்கைக்கு
எப்பொழுது வந்து கிட்டுமோ வென்று என் மனமானது சதா தபித்துக்
கொண்டிருந்தது. தாங்கள் என்மீது தயவுகூர்ந்து அனுப்பிய நமது திவ்
விய திருமறையின் மேலான பொக்கிஷத்தைக் கைக்கொண்டேன். அப்
பொழுதே அடங்காத ஆனந்தங்கொண்டேன். மறு மறு வெளியீடுகளும் சீக்
கிரம் வெளிவரும்படியாய் ஆண்டவனிடம் அனவரதமும் துஆ செய்கின்
றேன். இதற்கு ஆண்டவன் அருள்புரிவானாக. இங்ஙனம், கா. மு. சுலைமான்.

தென்காசிக்கடிதம்:—ஆலீ ஜனாப், பா. தாவூத்ஷா சாஹிப், B. A.
அவர்களுக்கு. ஸலாம். தாங்கள் என் விலாசத்திற்கு அனுப்பிய ஜவாஹிருல்
புர்கான் என்னும் குர்ஆன் தமிழ் மொழிபெயர்ப்பும் "தாருல் இஸ்லாம்"
பத்திரிகையும் அன்புடன் பெற்றுக்கொண்டேன். ஷை தப்ஸீரை என் கரத்
திலேந்திப் பிரித்துப் பார்த்ததும் எனக்குண்டான ஆனந்தத்திற் கெல்லை
யில்லை. இத்தகைய மகோன்னத நிலைமைபெற்ற நூலை உற்பத்திசெய்
தற்குத் தாங்கள் எடுத்துக்கொண்ட பிரயாசையையும் பொருட் செலவை
யும் கவனிக்குங்கால் இதற்கு இட்ட விலை மிகமிகச் சொற்பமென்றே தெரி
கிறது. இந்தத் தப்ஸீரை யான்சில மௌலவிகளிடத்தில் காண்பித்ததில்
அதன் அர்த்தமும் கருத்தும் ஸுன்னத் ஜமாஅத் கொள்கைக்கு முற்ற முற்
றப் பொருத்தமாயிருக்கிறதென்றும் யாதும் அர்த்த வித்தியாச மில்லையென்
றும் சொல்லி அதன் தமிழ்நடையை வியந்து கூறினார்கள். தேர்ந்த உலமாக்
களின் அபிப்பிராயம் இவ்வாறிருக்க இதைக் கண்டனம் செய்வதெல்லாம்
ன்றே யான் துகின்றேன். இஸ்லாத்தின் உண்மையான கொள்
றிந்து உ ன முஸ்லிமாயிருக்க அபேக்ஷிப்பவர்கள் இந்தத்
ம்" பத்திரிகையையும் முறையே வாசித்திவரல்
ள் உண்மையுள்ள,
அ. நா. முகம்மது இஸ்மாயீல் சாஹிப்.

—முஸ்லிம் சகோதரர்களே! எமது தமிழ்நாட்டு
கள் முன்னேறவும், தீனுல் இஸ்லாமென்னும் மார்க்கம்
வும் முயற்சிசெய்து வருகிறவரும் சங்கை பொருந்திய "தாருல்
பத்திராதிபருமாகிய கனம். பா. தாவூத்ஷா அவர்கள் நமது
னைத் தமிழில் மொழிபெயர்த் திருக்கிறதைப்பற்றிச் சிலர்
ம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். சிலர் காபிர்
ர்ஜுமா செய்யப்பட்டிருக்கிறதென்று சொல்லுகி
ாருமையின் கூற்றே என்று சொல்லலாம். அரபு

பாஷையில் மட்டுந்தானு தர்ஜுமா இருக்கவேண்டும்? இதற்கு இதுவரையில் ஒரு ஆதாரமும் தென்படவில்லை. சில கனவான்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்ததனுல் ஆயிரக்கணக்கான ஆங்கில கனவான்கள் தீனுல் இஸ்லாத்தில் பகிரங்கமாகச் சேர்ந்திருக்கிருர்கள். "பம்பாய்க் கிரானிக்கிள்" மாஜீ பத்திராசிரியர் ஜனுப் மார்மடியூக் பிக்தால் அவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க முன் வந்திருக்கிருர். அவரிடத்தில் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கக்கூடாதென்று நமது உலமாக்கள் சொல்லக்காணேம். மேலும் குர்ஆன் தமிழ் தர்ஜுமாவினுல் இன்னும் ஒருவருஷத்தில் தமிழ்நாட்டில் எத்தனையோ அன்னிய மதஸ்தர்கள் தடையின்றி இஸ்லாத்தில் சேர்வார்கள். இப்படித் தீனுக்காகப் பாடுபடக்கூடிய கனவானை முன் வரவொட்டாமல் என்போன்ற அறியார்கள் தடை செய்வதனுல்தான் அயல் மதவாதிகளிடத்தில் அகப்பட்டுக்கொண்டு திண்டாடவேண்டியதா யிருக்கிறது. சிலர் ஜனுப், தாவூத் ஷா சாஹிப் அவர்கள் அஹ்மதியா, காதியானிக் கொள்கைகளை யுடையவர் என்றும் சொல்லுகிருர்கள். ஆனுல் அவருடைய வியாசங்களிலும் செய்கைகளிலும் அப்படிக் காணப் படவில்லை. அப்படியே ஜனுப் ஷா அவர்கள் அந்தக் கொள்கைகளை யுடையவ ரென்றே சொல்வோம். அப்போதும் நமது மார்க்கப்படி ஒரு ஆலிமுடைய உபதேசத்தின்படி நடக்கவேண்டுமே தவிர அவருடைய செய்கைகளைக் கவனிக்கவேண்டியதில்லையே. ஒரு கனவான்மீது வீண்பழி சுமத்தாமல் நேர்வழியில் முயற்சி செய்வது நலம். ஜனுப் ஷா சாஹிப்போல் கண்ணியமுள்ள கனவான்கள் இன்னும் இரண்டுபேர் நமது தமிழ் நாட்டி லிருந்தால் நமது நாடு எவ்வளவோ மேன்மையையடை
மென்று தடையின்றிச்சொல்லலாம். முஸ்லிம்கள் சங்கைபொருந்திய "தாரு
இஸ்லா"த்தை மாதம் ஒருமுறை படித்துப் பார்ப்பதில் எவ்வளவு நன்மைக
ளிருக்கின்றனவென்று சொல்லாமலே விளங்கும். இந்த அருமைவாய்ந்த "தாருல் இஸ்லா"த்துக்கு ஒவ்வொரு முஸ்லிம் கனவானும் சாந்தாதாரராகச் சேர்ந்து ஆதரிக்குமாறு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்: K. S. சுலை...ன்லெவ்வை

மைடான்கடிதம்:—அருளாளனும் அன்புடை... மாகிய அ...
வின் திருநாமத்தால். மாண்புமிக்க அன்பின்...
ஜனுப், பா. தாவூத்ஷா அவர்கள் சமுகத்திற்...
முண்டாவதாக. தங்களின் "தாருல் இஸ்லாம்"...
கொண்டே படித்துவந்திருக்கின்றேன். நமது...
ஞானம் மகாசூனியமாகி முஸ்லிம்கள் இஸ்லாத்தின் தத்...
உள்ளவாறறிய வகையற்றிருந்தபோது நந் "தாருல் இஸ்லாம்"...
அதைப் படித்த ஒவ்வொருவரையும் இஸ்லாமிய ஞான...
கொண்டுவந்து விட்டிருக்கிறதென்று கூசாமல் கூறலாம்.

ஆதிகாலந்தொட்டு நந் தமிழ் நாட்டில் கைய...
முறையால் நம் இஸ்லாமிய மார்க்க ஞானம் நாளா...
வகையின்றி க்ஷீணித்துவிட்டது. காலதேச வர்த்தம...

கல்வி முறைன் திருத்தி யமைத்து, தற்போதிருக்கும் ஒழுங்கீனமுள்ள முறையைத் தவிர்த்து யாவரும் எளிதில் தெளியும்படியான புதிய முறையை அமைத்து நம் இஸ்லாமிய ஞானம் விருத்தியாகும் பொருட்டு முஸ்லிம் சகோதரர்களைத் தூண்டி எழுப்பியும் என்போன்ற தமிழ்மட்டு மறிந்தவர்கள் அறியமுடியாத அரிய தத்துவங்களை எடுத்து விளக்கியும்வரும் இவ்வரிய சஞ்சிகை நம் தமிழ்நாட்டு முஸ்லிம்கள் முன்னைவிடப் பன்மடங் கதிகமான ஞானுபிவிருத்தியடைந்து பல துறைகளிலும் முன்னேற்றமடையச் செய்யுமென்பது திண்ணம். அன்றியும் தாங்கள் வெளியிட்டிருக்கும் குர்ஆன் ஷரீபின் தமிழ்மொழிபெயர்ப்பானது நான் வாங்கிப் படிக்க ஆவல்கொண்டு தருவிக்கப் பல முயற்சி செய்தும் எனது துரதிருஷ்டத்தால் நாளது வரையில் எனது கைக் கிட்டாததைப்பற்றி அதிகதுக்கப்படுகிறேன். இவ்வரிய கிரந்தத்தினைப் படிக்க மற்றவர்களைவிட நான் பின் தங்கிவிட்டதானது எனது துரதிருஷ்டமென வருந்துகிறேன். இத்துடன்வரும் ரூ.45. பெற்றுக்கொண்டு கீழ்க்கண்விலாசதாரர்களாகிய எனதுநண்பரிருவருக்கும் வருஷம் ஒன்றுக்குச் சந்தாவையவைத்துக்கொண்டு சஞ்சிகை அனுப்புவதுடன் கீழ்க்குறித்த விவரப்படி குர்ஆன் மொழிபெயர்ப்பும் மற்றப் புத்தகங்களு மனுப்பி வைக்கும்படி கோருகிறேன். தங்களின் இஸ்லாமிய பிரசாரத்திற்கு அல்லாஹுத் தஆ'லா இம்ம மறுமை இரண்டிலும் மனச்சாந்தியளித்துச் சந்தோஷப்படுத்திவைப்பாக.

இங்ஙனம்: ச. இ. மு. முகம்மத்தலி.

ஒரு விருத்தம்

ஆராயுந் தமிழ்புலமை தாவுத்ஷா நடைவனப்பு மழகும் பெற்றே
நேரான பொருட் பாங்கு மெல்லாரும் பாராட்டு நிலையுந் தாங்கிப்
பாராளு மன்னரும் பண்டிதருங் கையேந்திப் படிக்குஞ் சீர்த்தி
தாராள மாயுள்ள "தாருல் இஸ்லா" மிகவுந் தழைத்து வாழ்க.

கா. சி. சிவசங்கர முதலியார்,
மானேஜர் ...லிக்குப்பம், எம். முஹம்மத் யாஸீன் சாகிப்,
சகோதரர்கள்.

மதிப்புரை

...ர்:—இது பெண்களின் முன்னேற்றத்துக்காக உழைக்க
...த்திரிகைகளுள் ஒன்று. இதன் ஆசிரியர் ஸ்ரீமதி,
... யாழ்ப்பாணத்திலின்றும் மாதந்தோறும் வெளி
...யிற் சிறந்த இப்பெண்மணி தன் தாய்நாட்டிலுள்ள

பெண்களுக்கும் பொது மக்களுக்கும் அறிவுறுத்த முன்வந்தது போற்றத் தக்கதே. இதில் பெண்பாலாருக்கேற்ற அனேக சிறந்த விஷயங்கள் காணப் படுகின்றன. இதன் வருஷ சந்தா ரூபா 5. வேண்டுவோர் யாழ்ப்பாணத்தி லுள்ள "தமிழ் மகள்" ஆபீசுக் கெழுதிக்கொள்ளலாம்.

கார்டியன் டைரி:—1925-ம் வருஷத்து, கார்டியன்டைரி ஒன்று வரப்பெற்றோம். வழக்கம்போல் இதில் எல்லாவிதமான அம்சங்களும் காணப் படுகின்றன. ஒவ்வொரு பக்கத்திலும் ஆங்கிலம், தமிழ், தெலுங்கு, மலை யாளம், ஸம்ஸ்கிருதம் ஆகிய ஐந்து பாஷைகளில் தேதிகள் காணப்படுகின் றன; கும்பகோணம் மடத்துப் பஞ்சாங்கமெழுதுகிற ஸ்ரீமான் டி. எஸ். விஸ்வ நாத சுரௌதி B.A., அவர்களால் கணிக்கப்பட்ட தமிழ், தெலுங்கு பஞ்சாங் கமும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இன்னும் பற்பலவிதமான எல்லா விஷ யங்களும் நிரம்பிக் கிடக்கின்றன. வழக்கம்போல் நேர்த்தியான காகிதத் தில் அழகாக அச்சிட்டு நன்றாகக் காலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது. விலை அணா 12. எல்லா இடங்களிலும் எமது ஆபீஸிலும் கிடைக்கும்.

செந்தமிழ்ச் சிந்தாமணி:—இது சென்னையினின்று வெளியாகும் ஒரு மாதப்பத்திரிகை. இதன் ஆசிரியர் திருவாளர் ம. ஜயராம் நாயுடு அவர்கள். இவர் ஓர் தமிழ்ப்பண்டிதராதலின் இவரைத் தமிழுலகம் அறியு மென்றே நம்புகிறோம். இது தேசம், பாஷை, சமயம் மூன்றின் முன் னேற்றத்துக்காக உழைக்கத் தோன்றியுள்ள சிறந்த செந்தமிழ்ப் பத்திரிகை யாம். இதில் இல்லறவொழுக்கம், வான சாஸ்திரம், கணிசாஸ்திரம், சரித் திர ஆராய்ச்சி போன்ற அரிய பெரிய வியாசங்கள் கல்வி [illegible] சிறந்த மகான்களால் எழுதப்படுகின்றன. நல்ல அழகிய காகிதத்தில் நல்ல நடை யில் பிரசுரிக்கப்படுகிறது. இதன் வருஷ சந்தா உள் நாடுகளுக்கு ரூபா 2. வெளி நாடுகளுக்கு ரூபா 2-8-0. வேண்டுவோர், "செந்தமிழ்ச்சிந்தாமணி" ஆபீஸ், நெ 16, கருப்பூர முதலிதெரு, பெரியமெட், சென்னை என்ற விலா சத்துக் கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

குடி நூல்:—இஃது ஒரு மாத மிருமுறைப் பத்திரிகை. இதன் ஆசிரி யர் தமிழ்நாடு கத்தர்போர்டு காரியதரிசி ஸ்ரீமான் [illegible] தானம் அவ [illegible] இஃது ஆரணியிலுள்ள திருநாவுக்கரசு அச்சு [illegible] ருந்து [illegible] கிறது. இதில் தமிழ்நாடு கத்தர் போர்டு சம்பந் [illegible] பிரசுரிக்கப்படுகின்றன. இதன் சந்தா 3 ம [illegible] 2000 கஜம் கத்தர் நூல். குடிகளுடைய கத்தர் [illegible] ரிகை நடத்தப்படுவதால் இதற்கு, "குடி நூல்" எ [illegible] ஆரணி திருநாவுக்கரசு அச்சுக்கூடத்திலிருந்து பெற்று [illegible]

உதயணன் கதை:—ஸ்ரீமான் க. சு. சேஷகிரிஐயர் [illegible] விலை அணா ஐந்து. இக் கதையின் ஆறு காண்டங்களும் சுருக்க [illegible] வருக்கும் விளங்குமாறு எழுதப்பட்டிருக்கின்றன. இ 43 [illegible] மயிலாப்பூரில் கிடைக்கும்.

பாணபுரத்து வீரன்:—நவசக்தியின் உதவி [illegible] வெ. சாமிநாத சர்மா அவர்களால் நாடகரூபமாக எ [illegible]

முறையில் தேசபக்தியை ஊட்டுவதற்கேற்ற ஒரு நாடகம். நல்ல நடையில் எழுதப்பெற்று அழகான விதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தேசாபிமானிக்கும் அத்தியாவசியமாயிருக்கும். விலை ரூபா ஒன்று. இது எஸ். ராதா அண்டுகோ, மிண்ட் பில்டிங்ஸ், மதராஸ், என்ற விலாசத்தில் கிடைக்கும்.

மதிமுகி:—இஃதொரு துப்பறியும் தமிழ் நாவல். இது நாகை-திரு. சொ. தண்டபாணி பிள்ளையவர்களால் இயற்றப்பெற்றது. விலை அணா 8. வழக்கம்போல் துப்பறியும் திறமை இதில் காட்டப்பட்டிருக்கிறது. நவீன கப் பிரியர்களுக்கொரு நல்விருந்தாகும். இதுவும் மேற்படி எஸ். ராதா அண்டு கோவில் கிடைக்கும்.

மாதாந்த விசேஷங்கள்

கன்ஸர்வேடிவ் மந்திரிகள்: இந்தியாவுக்குச் சுயராஜ்யம் கொடுக்க லாமென்று வாய்ப்பந்தலிட்டுச் சமயம் வாய்த்தபோது பயந்துகொண்டிருந்து விட்டவர்கள் இங்கிலாந்திலுள்ள தொழிலாள மந்திரிச் சபையாரா யிருந்தார் கள். இவர்கள் மந்திரி ஸ்தானத்தைவிட்டுச் சென்றபின் இப்பொழுது கொஞ் சமும் விட்டுக்கொடுக்காத கக்ஷிக்காரராகிய கன்ஸர்வேடிவ் பார்ட்டியார் மந் திரிச் சபையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். முதல் மந்திரியாகிய பால்டு வின் துரையாலும் இந்தியா மந்திரியாகிய பர்க்கன்ஹெட் பிரபுவாலும் நமக் கொன்றும் இன்னுஞ் சில காலத்துக்கு விமோசனம் விளையப்போகிற தில்லை. ஆனால் அடக்குமுறைத் தாண்டவமே இன்னும் அதிகம் தலை விரித்தாடுதல் கூடும்.

மௌலானாவின் இரு பத்திரிகை: முதலில் நான்கு ஆண்டுகள் வரை நடைபெற்றுப் பிறகு பத்து ஆண்டுகள் மட்டும் நின்றுபோயிருந்த மௌலானா [illegible] ம்மதலியின் [illegible] ம்ரேட் என்னும் ஆங்கில வாரப்பத்திரிகையும், ஹம் [illegible] ன்னும் [illegible] பத்திரிகையும் சென்ற 31-10-24 முதல் நடை [illegible] இனி இந்தியாவுக்கு முன்னையைச் சாட்டினும் [illegible] செய்யுமென்று நம்புகிறோம். மௌலானாவுக்கும் [illegible] களுக்கும் ஆண்டவன் தீர்க்காயுளைக் கொடுத்தருள் [illegible]

[illegible] ன் மரணம்: இந்தியாவுக்கு வீரத்தாயாய் விளங்கிவந்த "பீ [illegible] அவர்கள் (இவர்களின் இயற்பெயர் ஆபாதி பானு அப்துல் [illegible] ஆனால் இவர்களின் பேரர்களோ பீஅம்மான் என்று கூப்பிட்டு [illegible] அலி சகோதரர்களோ "பவ்வா" என்று கூப்பிடுவது வழக்கம்) [illegible] வும் சுயராஜ்யத்துக்காகவும் அதிகம் பாடுபட்டு விட்டுச் [illegible] டியுமுன் 2 மணிக்குச் சற்றுப்பின் ஆண்டவன் ஆணைப் [illegible] னார்கள். இதற்காக அலி சகோதரர்களுக்கும் அவர்களு

டையு குடும்பத்தினருக்கும் அனுதாபங் காட்டுகின்றோம். பீ அம்மாளைப் போன்ற அரைடஜன் வீரமாதாக்களும் அலி சகோதரர்களைப்போன்ற ஒரு டஜன் வீர புருஷர்களும் இந்தியாவில் இருப்பார்களாயின்—?

ஹுஸைன் அரசரின் பொக்கிஷம்: ஹுஸைன் மக்கத்தைவிட்டு ஓடும் போது மோட்டார்காரின் பெட்ரோல் எண்ணெய் வைக்கக்கூடிய ஒரு டஜன் டின்களில், டின் ஒன்றுக்கு 20,000 தங்கப்பவுன் வீகிதம் நிரப்பி அவற்றைஒருவண்டியில் ஏற்றிக்கொண்டுசென்றாராம். இவர் எடுத்துச்சென்ற ஆஸ்தியின்மொத்தப் பெறுமானம் 30லக்ஷம்பவுன்களாம். இஸ்லாத்தின்விரோதிகளிடத்திலிருந்து இலஞ்சமாக வாங்கிய இத்துணைப் பவுன்களிருந்தும் எவருடைய துணையுமில்லாமல் ஏகாங்கியாய் ஜித்தாவிலிருந்து புறப்பட்டுப் போய்விட்டார்.

மோஸுலில் எல்லைத் தகரார்: மோஸுலின் எல்லைத் தகராரைப் பற்றித் துருக்கியரும் ஆங்கிலேயரும் சர்வதேச மகாநாட்டின் தீர்மானப்படி கட்டுப் படுவதென்று ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இதனால் இனி நன்னம்பிக்கை யுண்டாகலாம்.

எகிப்தும் இங்கிலாந்தும்: ஆங்கில ராணுவத்தை எகிப்தில் வைக்கும் விஷயமாய் ஆங்கிலேயருக்கும் மிஸ்ர்காரருக்கும் இன்னும் சமாதான முண்டாகவில்லை. இதன் சார்பாகத்தான் தகரார் ஏற்பட்டு எகிப்து மந்திரிகள் சில தினங்களுக்கு முன் ராஜீநாமா செய்தனரென்று சந்தேகிக்க இடமுண்டாகின்றது.

மாஜீ கலீபா: இவர் ராஜீய வேலைகளினின்றும் நீங்கி ஸ்விட்ஜர்லாந்தி லிருந்து பிரான்சுக்குச் சென்றுவிடப்போகிறாரென்றும், இவருடைய குடும்பத்தினர் பன்னிருவருள் இவர் மனைவியார் மூவரும் பர்தாவைக் கழற்றிவிட்டுப் பொதுக் காரியங்களிலெல்லாம் பகிரங்கமாகத் தலையிட்டுவருகிறார்களென்றும், கலீபாவானவர் பாண்டுவாத்தியங் கேட்பதிலும் சங்கீதக் கச்சேரிகளை அனுபவிப்பதிலும் பிலியர்ட் ஆட்டம் ஆடுவதிலுமாகக் காலங்கழிப்பாரென்றும் லாஹூரில் வெளியாகும் "கரம்வீர்" பத்திரிகை கூறுவதாகச் சென்னை "ஹிந்து"ப் பத்திரிகை கூறுகிறது.

சர்வகட்சி மகாநாடு:—நவம்பர் 21, 22ந் தேதி பம்பாய்
கூடிய சர்வ கட்சிகளின் மகா நாட்டில் வங்காளத்
எல்லோருடைய ஏகோபித்த தீர்மானத்தின்மேல்
மேலும் எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகள் சேர்ந்
கப்பட்டிருக்கிறது. இச் சபையார் அடுத்த 1925
இந்தியாவின் எல்லாக் கட்சியினரும் எவ்வாறு காங்கிரஸ்
சுயராஜ்யம் பெறுதற்கான வழியில் ஒன்று சேர்ந்து உழைக்க
னும் திட்டத்தைத் தயார் செய்வார்கள். இப்படிப்பட்ட முயற்
தியர் முழுதும் ஒற்றுமைப்பட்டு ஒருமுகமாய் உழைப்பதற்கு
வாய்ந்த வழியானது ஏற்படுதல் கூடுமென்று எல்லோரும்
கையுடன் எதிர்பார்க்கின்றனர். இவ்வாறே எல்லாம்
செய்தருள்வானாக.

END OF
ISSUE